ௐ
# இந்துசாதனம்
SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஹூ தைமீ எஉ (1936 ஜனவரி 20) திங்கட்கிழமை { இலகம்—எஎ

# வடபகுதித் தேர்தல் முழக்கம்.

## நான்கு தொகுதிகளில் போட்டி.

### ஊர்காவற்றுறைக்கு எதிரிடையில்லை

மாகாணத் தலைவரின் அரியவேண்டுகோள். | முறைகெட்டவழியில் தேர்தல் வேண்டாம்.

### யாழ்ப்பாணம் முன்மாதிரி காட்டவேண்டும்

(நமதுவிசேஷ நிருபர்)

சென்ற புதன்கிழமை மத்தியானம் யாழ்ப்பாணம் கச்சேரியில் மாகாணத் தலைவர் மிஸ்டர் E T டைசன் அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாணப்பகுதியின் 4 ஸ்தானங்களுக்கும் அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஊர்காவற்றுறைத் தொகுதியை ஒழிந்த ஏனைய தொகுதிகளில் அபேட்சகர்கள் எதிரிடையிட்டு நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்தனர் இத்தொகுதிக்கு ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்கள் எதிரிடையின்றித் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

#### பெரும் அமளி.

மத்தியானம் 12 மணிக்கே நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் எனக்குறிப்பிடப் பட்டிருந்தும் பெருந்தொகையான ஜனங்கள் காலை 10 மணிக்கே கச்சேரி முன்றிலிற் கூட ஆரம்பித்துவிட்டனர். 12 மணியானதும் மாகாணத்தலைவர் மிஸ்டர் E. T. டைசன் அவர்கள் முன்னிலையில் அபேட்சகர்கள் தங்கள் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர் விபரம் வருமாறு:—

#### யாழ்ப்பாணம்— தென்மராட்சித்தொகுதி.

ஸ்ரீ அ. மகாதேவா B A L. L B.

இவருடைய பெயரை நியமனப்பத்திரத்தில் பிரேரித்தவர் ஸ்ரீ R. R. நல்லையா (மகாசங்கத்தலைவர்) அநுமதித்தவர் ஸ்ரீ C R. தம்பையா (பிறக்றர் சாவகச்சேரி) ஸ்ரீ மகாதேவாவுக்குரிய நிறம் பச்சை.

மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரை B A J. P. M B E

பிரேரித்தவர் ஸ்ரீ ஆறுமுகஞ் செட்டியார் சந்தப்பசேகரம், அநுமதித்தவர் ஸ்ரீ முத்தையா கதிரவேலு.

மிஸ்டர் நெவின்சிற்குரிய நிறம் சிகப்பு.

#### காங்கேசன்துறைத் தொகுதி.

ஸ்ரீ சுப்பையா நடேசபிள்ளை B A., B L., F. R. E S.,

பிரேரித்தவர்: ஸ்ரீ சங்கரப்பிள்ளை தரையப்பா, அநுமதித்தவர்: ஸ்ரீ K. சின்னத்தம்பி முருகேசு.

ஸ்ரீ நடேசபிள்ளையின் நிறம் பச்சை.

ஸ்ரீ அப்பாத்துரை பொன்னையா

பிரேரித்தவர்: ஸ்ரீ சிவபாதப்பிள்ளை சுவாமிநாதன், அநுமதித்தவர்: ஸ்ரீ கனகசுந்தரம் இராசமாணிக்கம் ஸ்ரீ பொன்னையாவுக்குரிய நிறம் சிகப்பு

#### பருத்தித்துறைத் தொகுதி

ஸ்ரீ கணபதிப்பிள்ளை காங்கேயர் பொன்னம்பலம் M A., LL.B.,

பிரேரித்தவர் திரு. வே. அருளம்பலம், அநுமதித்தவர்: திரு செல்லையா தனபாலசிங்கம்.

இவர்க்குரிய நிறம் சிகப்பு

ஸ்ரீ கதிரவேலு பாலசிங்கம்

பிரேரித்தவர் ஸ்ரீ கந்தப்பா முத்துக்குமாரு அநுமதித்தவர் ஸ்ரீ நாகலிங்க முதலியார் கிருஷ்ண பிள்ளை ஸ்ரீ பாலசிங்கத்திற்குரிய நிறம் பச்சை.

#### ஊர்காவற்றுறைத் தொகுதி.

ஸ்ரீ வைத்திலிங்கம் துரைசுவாமி BA

பிரேரித்தவர் ஸ்ரீ இளையதம்பி முருகேசபிள்ளை (பிறக்றர்) அநுமதித்தவர் ஸ்ரீ பீலிக்ஸ் ஜெயரத்தினம் பொன்னம்பலம்.

#### மன்னார் முல்லைத்தீவுத் தொகுதி

ஸ்ரீ இரத்தினசாமி
ஸ்ரீபத்மநாதன் M. A
நிறம் சிகப்பு
டக்டர் C சிவசிதம்பரம்
நிறம் பச்சை

இத்தொகுதிக்கான நியமனப்பத்திரம் முல்லைத்தீவுக் கச்சேரியிற் சமர்ப்பிக்கப்பட்டது.

#### மாகாணத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்து நான்கு தொகுதிகளுக்குமான நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதும், மாகாணத் தலைவராய மிஸ்டர் E. T. டைசன் அவர்கள், அபேட்சகராயுள்ளார் தேர்தற்காலத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையைப்பற்றிப் பின்வருமாறு சில குறிப்பிட்டார்:

"தேர்தலுடன் சம்பந்தப்பட்டுள்ள அநேக கெட்ட விஷயங்கள் நடைபெறுதபடி, அபேட்சகராயுள்ளார் பரஸ்பரம் ஒற்றுமை பூண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் தேர்தல்களை மிக்க ஒழுங்கான முறையில் நடத்தி மற்றவர்களுக்கு ஓர் முன் மாதிரியாய் விளங்கவேண்டும்.

"வாக்காளர்க்கு இலவசச் சாப்பாடு அளித்தல், மோட்டார் வண்டியில் ஏற்றுதல் என்பனவற்றைத் தடுத்தால், எவ்வளவோ செலவு குறைந்துவிடும்".

## இருமந்திரிகள் நீங்கினர்.

### ஸ்ரீ பெரிசுந்தரத்தின் புகார்

### மக்கான் மரக்காயர்க்கு நியமனம் ?

(நமதுசொந்த நிருபர்)

சென்ற அரசாங்கசபையில் மந்திரப்பதவிகள் வகித்த இருவர் இம்முறை நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யவில்லை. ஒருவர் ஸ்ரீ பெரிசுந்தரம் (கைத்தொழில் வர்த்தகப் பகுதி மந்திரி) மற்றவர் போக்குவரத்துப்பகுதி மந்திரியான மிஸ்டர் மக்கான் மரக்காயர்.

ஸ்ரீ பெரிசுந்தரம் தம் நியமனப் பத்திரத்தைச்சென்ற புதன்கிழமை தாக்கல்செய்து, அரைமணி நேரத்தின்பின் வாங்கிக்கொண்டார் தேர்தலில் தமது எதிரிகள் செய்யும் எளிடவேலைகளைத்தாம் செய்ய முடியாது, அத்துடன் தமது தேகசுகங்கெட்டுவிட்டது. இவையே ஸ்ரீ பெரிசுந்தரம் தேர்தலிற் போட்டியிடாது நிற்பதன்காரணங்களாம். இப்போது அவர் நின்ற ஹற்றன் பகுதிக்கு ஸ்ரீமதி லக்ஷ்மி இராஜரத்தினமும், ஸ்ரீ K. நடேசஐயரும் போட்டியிடுகின்றார்கள்.

மிஸ்டர் மக்கான் மரக்காயர் தேசாதிபதியால் அரசாங்கசபையங்கத்தவராய் நியமனம் செய்யப்படலாம் என நம்பப்படுகிறது.

இனி பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றனர்:—

(1) சேர் D. B. ஜெயதிலகா (உள்நாட்டு மந்திரி களனிப்பகுதிக்கு)
(2) மிஸ்டர் D. S சேனநாயக்க (விவசாய மந்திரி, மினுவாங்கொடைப்பகுதிக்கு)
(3) மிஸ்டர் S W. R. D. பண்டாரநாயக்கா (வியாங்கொடை)
(4) மிஸ்டர் J. L. கொத்தலாவலை (குருநாகல்)
(5) மிஸ்டர் H. R. பிறீமன் (அநுராதபுரம்)
(6) மிஸ்டர் G C S. கொறியா, (சிலாபம்)

## அரசாங்கசபைத் தெரிவு.

### யாழ்ப்பாணச் சங்கத்திற்கு வேண்டுகோள். நிலைமையை அறிந்து கர்மம் ஆற்றவேண்டும்

### நடக்கப்போகும் தெரிவில் தமிழர் நிலை

[சிங்கள தேயவாசி எழுதுகிறார்]

இவ்விலங்கா துவிபத்தில் வதியும் தமிழர்களாகிய நாம் ஜனந்தொகையில் எம்மிலும் பார்க்கப் பலமடங்கு கூடிய சிங்களச் சகோதரருடன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் சமபங்குடையவர்களாக இதுகாறுமிருந்து வந்தமைக்கு எம்மிடத்திற் குடிகொண்டிருந்த ஊக்கமும் ஒற்றுமையும் எம் தலைவராயிருந்தவர்களிடத்திலிருந்த பெருந்தகைமையும் புத்திக் கூர்மையுமே யென்க. தற்போது நடைபெற்றுவரும் டொனமூர் அரசியற்றிட்டமானது நம் நாட்டிற் புகுத்தப்பட்ட நாள் முதல் எங்களுக்குள் கட்சிப் பிளவுகளும் பொறாமை விரோதம் முதலியனவும் தலைவிரித்தாடுகின்றன. எங்கள் உரிமைகளுக்காக வாதாடக்கூடிய செல்வாக்குள்ள சங்கங்களோ, பத்திரிகைகளோ, தலைவர்களோ எம் மத்தியில் இல்லை. எமக்கென உள்ள சங்கங்களும், வாரப் பத்திரிகைகளும் ஒன்றோடொன்று மாறுபட்டு மோதிக்கொள்கின்றன. தேசிய வாதம் வகுப்பு வாதம் என்னும் சொற்கள் கருத்து, நிலைமை, காலம் முதலியன நோக்காது உபயோகிக்கப்படுகின்றன. தேசியப்பத்திரிகை யென மகுட நாமமிட்ட பத்திரிகை ஒன்று தமிழருக்குள் இந்தியத்தமிழன் கொழும்புத் தமிழன் தீவுத் தமிழன் யாழ்ப்பாணத் தமிழன் என்பன போன்ற பிளவுகளை ஆதரிக்கின்றது. தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புவோரை வகுப்பு வாதிகளெனக் கூறுகின்றது. தமிழர்களாகிய நாம் முதலில் ஒரு கொள்கையுடையராய் ஒற்றுமை பூண்ட பின்பன்றே முழு இலங்கையின் ஒற்றுமையையிட்டு யோசிக்க முடியும்? இலங்கையிலுள்ள மற்றும் சிறுபான்மையினராகிய இந்தியர், முஸ்லீம்கள் - ஏன் அரசினரின் ஆதரவுமிகவுடைய ஆங்கிலேயர் - பறங்கிகள் தாமும் தற்போதுள்ள சிங்களத் தலைவர்களில் நம்பிக்கையற்றவராய் இருக்கின்றார்களே! சிங்கள நாடுகளில் வெளிவரும் அபேட்சகர் எவராகிலும் தேசியத்தைப் பற்றிப் பேசுகின்றனரா? சிங்கள நாடாகிய இலங்கைதமக்கே சொந்தமென்கின்றனரே! இங்கன்றோ தேசியப் பற்றுக் கொண்ட வீரர்கள் தங்கள் பிரசாரத்தைச் செய்தல் வேண்டும். சில ஆண்டுகட்கு முன்னர் காலஞ் சென்ற கௌரவ. அரு. சபாபதி, கௌரவ. ஆ. கனகரத்தினம் முதலிய தேசாபிமானிகளைத் தன் அங்கமாகக் கொண்டு சிறந்த அரசியல் ஸ்தாபனமாய் விளங்கிப் பின் உறங்கிக் கிடந்த யாழ்ப்பாணச் சங்கம் மீண்டும் உயிர்பெற்றதோடு பல கட்சியிலுள்ளவரையும் தன்னகத்தே சேர்த்து அரசியல் விஷயத்தோடு பொருளாதார விஷயத்தையும் சேர்த்துப் பல நன் முயற்சிகளையும் செய்யத்தொடங்கியதைக் கண்டு பலரும் அக மகிழ்ந்தனர். ஆனால் தற்போது நடைபெற விருக்கும் பிரதிநிதித்தேர்தலில் அரசாங்கசபை முக்கியமாகத் தென்படாமையாலோ அன்றி வேறு அந்தரங்க காரணங்களாலோ யாழ்ப்பாணச் சங்கம் தலையிடத் தவறி விட்டது. ஒவ்வொருவரின் மனக் கிடக்கையையும் யோக்கியதையையும் அறிவதற்கு தேர்தற்காலம் ஓர் சோதனை காலமென ஓர் பெரியார் கூறியது முழுவதும் உண்மையேயாகும். அகில இலங்கைத்தமிழர் மகாநாடு ஒன்று கூடப்போவதாக சில காலம் பறை சாற்றினார்கள். மகாநாடுகளுக்குத் தான் நம் நாட்டிற் குறைவே கிடையாது. இந்த யாழ்ப்பாணச் சங்கமானது உண்மையிற் பிரதிநிதித்துவம் உடையதாய், செல்வாக்குடையதாய் ஏதாகிலும் நன்மை செய்யக் கூடியதாய் இருந்தால் இப்பொழுதுநடைபெற விருக்கும் தேர்தலால் நிகழும் வீண் பொருட் செலவையும், பகை துரோகங்களையும் தவிர்த்து நாட்டில் ஒற்றுமையையும் அதனால் பெருமையையும் தேடியிருக்கலாமே! தற்போது பருத்தித்துறைப் பகுதியில் கடுமையாகப் போட்டியிடும் இரு தகுதி வாய்ந்த அபேட்சகரும் இரு பகுதிகட்குப் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கலாமே! கடந்தவற்றைப் பேசுவதினும் பயனில்லை. இனியேனும் இச் சங்கமானது இவ்விஷயத்திற் கவனமெடுத்து இலங்கையிலுள்ள கத்தோலிக்க சங்கமும் ஐரோப்பிய சங்கமும் செய்வது போன்று தமிழர்களைப் பாதிக்கும் முக்கிய விஷயங்களில் அபேட்சகர்களின் அபிப்பிராயத்தைப் பகிரங்கமாக தெரிவிக்கும்படி கேட்டு அரசாங்கசபையில் விவாதத்திற்கு வரும் முக்கிய விஷயங்களிலெல்லாம் இச் சங்கத்தின் நிருவாகசபையாரைக் கலந்தாலோசித்தே கருமமாற்றுவதாக வாக்குறுதி பெறுதல் வேண்டும். தேர்தற்காலத்தில் கிறிஸ்தவன், கத்தோலிக்கன், சைவன், ஊரவன், இந்தியன், கொழும்பான் முதலிய வீண் பிரச்சினைகளொன்றும் கிளம்பாமலும், கைலஞ்சம் மதுபானம் முதலியன நடமாடாமலும் ஒரு அபேட்சகர் பக்கஞ் சார்பில்லாத பிரசங்கங்கள் பல ஒவ்வோர் தெரிவுப் பகுதியிலும் செய்து ஜனங்களை நல்வழிப்படுத்தல் வேண்டும். சென்ற அரசாங்க சபையில் எமது பிரதிநிதிகளாக விருந்த நால்வரும் முக்கியமான சில விஷயங்களில் மாறுபட்டிருந்தாலும் அரசியல் விஷயத்தில் ஒரு கொள்கையுடையவராக விருந்தமை மகிழ்ச்சிக்குரியதாகும். இவர்களைக் குறித்து "டெயிலி நியூஸ்" பத்திராதிபர்தானும் Jaffna Block யாழ்ப்பாணக் குழு எனப் பல முறை கூறினர். எமது பிரதிநிதிகளாவதற்கு அதிர்ஷ்டமுடையவர் எவராயிருப்பினும் ஒவ்வோர் விஷயத்திலும் எல்லோரும் ஒரு மனதுடையராய் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து கருமமாற்றக்கூடியவராய் இருத்தல் வேண்டும். தேர்தல்கள் (வீண் செலவு, துரோகம், பகை கைலஞ்சம் முதலியனவின்றி) நேரிய முறையில் நடைபெறுமாயின் பொது ஜனங்களை அரசியலில் ஈடுபடுத்தி அறிவூட்டச் சிறந்த சாதனமாகும். இதனை யாழ்ப்பாணச்சங்கத்தார்கவனிப்பார்களாக

# மிஸ்ரர் H R. பிறீமன்

## அன்னவர் வெற்றிக்கு மூலகாரணம் ஏழைகள்மீது அளவுகடந்த அன்பு

## வாழ்வு தாழ்வில் தமக்கும் பங்கே ஆங்கிலக் கனவானின் செயற் கருஞ் சேவை.

[ஓர் அன்னியர்: எம்மை அடிமைகளாக வைத்திருக்கும் ஜாதியைச் சேர்ந்தவர்- அனல் மிஸ்ரர் பிறீமன் அனேக வருஷகாலமாக இலங்கையின் அரசியல் மன்றங்களில் வட மத்திய மாகாணத்து ஜனங்களின் தனிப் பிரதிநிதியாய்த் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர், சென்ற அரசாங்க சபைத் தேர்தலில், மிஸ்ரர் பிறீமனுக்கு எதிராக நின்ற சிங்களப் பௌத்த அபேட்சகர் தம் சொந்த மதத்தை ஜாதியைச் சேர்ந்த வாக்காளர்களால் முறியடிக்கப்பட்டார். மிஸ்ரர் பிறீமனுக்கு அத்தேர்தலின் போது ஒருசதம் தானும் செலவு ஏற்படவில்லை: ஜனங்கள் பலமைல் தூரம் கால்நடையாகவே சென்று அவர்க்குத் தம் வாக்குச் சம்மதத்தை அளித்தனர். மிஸ்ரர் பிறீமனின் இத்தகைய வெற்றிக்குக் காரணம் என்ன? இதன் இரகசியம் என்ன? இவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்: தேர்தல்கள் முறைகேடான வழியில் நடைபெறும் இக்காலத்தில், இச் சீரிய கட்டுரை பயன் தரும் என்பதே நமது நம்பிக்கை. இது கொழும்பு டெயிலி நியூஸில் ஒருவரால் எழுதப்பட்டதாகும்.]

**1924-ம்** ஆண்டு அக்காலத்தில் என் விடுமுறைக் காலத்தைக் கழிப்பதற்காக அநுராதபுரம் சென்றேன் அங்கே மிஸ்ரர் H. R பிறீமனைச் சந்திக்க நேர்ந்தது

ஒரு நாள் மிஸ்ரர் பிறீமன் என்னையும், இன்னொருவரையும் அழைத்துக் கொண்டு கால் நடையாய் மிக்கிந்தலை என்னும் கிராமத்திற்குப் புறப்பட்டார்.

கிராமத்திற்குள் நுழைந்ததும், பன்னூற்றுக் கணக்கானோர், மிஸ்ரர் பிறீமனைச் சூழ்ந்து கொண்டனர் முதியார், இளைஞர், குழந்தைகள், மங்கையர் என்பவர்கள், மனமுவந்து கண்ட பயிரென முகமலர்ந்து மிஸ்ரர் பிறீமனை ஆனந்தத்துடன் நோக்கினர்.

இவர்கள் புடைசூழ மிஸ்ரர் பிறீமன் ஓர் குடிசைக்குள்ளே நுழைந்தார். "உணவுக்குப் போதிய பண்டங்கள் உண்டா"? என்ருர் அவ் வீட்டுக் காரரை நோக்கி; "ஆம், துரை ஏதோ கொஞ்சம் உண்டு" என்ற மறுமொழி கிடைத்தது ஆனல் மிஸ்ரர் பிறீமன் இந்த மறுமொழியுடன் திருப்தியடையவில்லை வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தார்; உணவுப் பண்டங்களை நோக்கித் திருப்தியடைந்தார்.

### தனித்தனி பரீட்சை.

இதன் பின், ஆங்கு இருந்த ஒவ்வொருவரையும் தமக்கருகே அழைத்து, அவர்களுக்கு நோய், பிணி துன்பம் உண்டா என்று விசாரித்தார் கண்ணோய், செங்கண்மாரி காமாலை முதலிய நோய்களாற் பிடிக்கப்பட்ட குழந்தைகள் சிலர் அங்கு இருந்தனர் உடனே அப்பிள்ளைகளின் பெற்றோரிடம் ஒவ்வொரு கடிதாசி எழுதி, அவற்றை அரசினர் வைத்தியசாலையிற் கொடுத்துச் சகுந்த சிகிச்சை பெறும்படி பணித்தார்.

### ஆடு மாடுகள் மீதும் கருணை.

இதற்கிடையில், இக்கிராமத்தில் உள்ள மக்கள் யாவரும் மிஸ்ரர் பிறீமனைச் சூழ்ந்து கொண்டனர் ஆடு மாடுகளை அழைக்கும்படி அவர் அக்கிராமமக்களுக்குச் சொல்ல, ஒரு கண நேரத்தில், அம்மிருகங்கள் யாவும் அவர் முன்னிலையில் கொண்டுவரப்பட்டன அவற்றிற்கு நோய்கள் உண்டோ என மிஸ்ரர் பிறீமன் பரிசோதித்தார். நோய்கண்ட மிருகங்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகளை அவர் அம்மிருகங்களின் சொந்தக்காரர்க்குச்சொல்லிக்கொடுத்தார்.

இதன் பின் மிஸ்ரர் பிறீமன் அக்கிராமத்தவர்களை நோக்கி, "உங்கள் விவசாய முயற்சிகளுக்கு ஏதும் பங்கம் ஏற்படுகிறதா?" என்று விசாரித்தார். உடனே அக்கிராம வாசிகளில் ஒரு கிழவன், தான் தண்ணீர் வசதியுள்ள நிலத்தைக் கேட்க அதனை அரசினர் தராது, நீர்ப்பாய்ச்சலுக்கு எட்டாத ஓர் காய்ந்த பூமியைத் தந்துவிட்டார்கள் என முறையிடு செய்தான். உடனே மிஸ்ரர் பிறீமன், அக்குடியானவரிடம் இருந்து அக்காணிப்பத்திரங்களைப்பெற்று வாசித்து, அவற்றைச் சுருட்டித் தம் சட்டைச் சாக்கிற்குள் இட்டார். (சில நாட்களின் பின் அக்குடியானவனின் குறை தீர்க்கப்பட்டது.)

### அதிர்ஷடப் பணப்பை.

மிஸ்ரர் பிறீமனிடம் ஓர் அதிர்ஷ்டப் பணப்பை உண்டு. அதில் 10 சதம், 25 சதம், 50 சதம் வெள்ளி நாணயங்கள் இருக்கும். இப் பையிலிருந்து நாணயங்களை எடுத்து, மிஸ்ரர் பிறீமன் அன்று வழங்கினர். சில குழந்தைகளுக்கு 50 சதம் சிலர்க்கு 25 சதமும், சிலர்க்கு 10 சதமும் அவரவர் அதிர்ஷ்டத்திற்கேற்பக்கிடைத்தது இவ் வெள்ளி நாணயங்களைப் பெற்ற குழந்தைகளின் மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா? பிறீமன் தாத்தாவை அக்குழந்தைகள் கட்டித் தழுவிக் கூத்தாடினர்.

இதன் பின் நாம் அக்கிராமத்தை விட்டுக் கிளம்பி, வேறும் 13 கிராமங்களுக்குக் கால் நடையிலேயே விஜயம் செய்தோம். எங்கும் மிஸ்ரர் பிறீமன் குடிகளின் க்ஷேமலாபங்களை விசாரித்து அவர்களின் குறைகளை விசாரித்துப் பரிகாரம் சொல்லிக்கொடுத்தார். எல்லாக் கிராமங்களிலும் அவர் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப்பணம் வழங்கினர். எங்கும் பிறீமன் தாத்தா குழந்தைகளினல்போற்றிக்கொண்டாடப்பட்டார்.

### சாதிமத பேதம் இல்லை.

தமிழர், முஸ்லீம்கள், சிங்களர் என்ற பேதம் மிஸ்ரர் பிறீமனுக்கு இல்லை. சென்றமுறை, அதாவது 1931ம் ஆண்டில் நிகழ்ந்த தேர்தலின் ஓர் கிழவி வாக்குச்சமயதம் போடும் இடம் வந்து, அந்த இடத்தில் தலைமை வகித்த என்னை நோக்கி, "தயை செய்து பிறீமன்துரையின் பெட்டியைக்காட்டுங்கள்" என்று மிக்க பரிதாபகரமான குரலிற் கேட்டாள் அவள் வயது 80 இற்குமேல் இருக்கும். "அந்தத்துரை, அந்தப்புண்ணியவான். அன்றைக்கு நான் சுகமில்லாமற் கிடந்தபோது என் குடிசைக்கு வந்து கொத்தமல்லித் தண்ணீர் வைத்துத் தந்தாரல்லவா? குயினைன் தந்தவர்; இதனையறியாது நீங்கள் நகைக்கிறீர்களே" என்று அவளின் கோலத்தைக்கண்டு நகைத்தவ்வையை நோக்கி அவள் கூறினள்.

மிஸ்ரர் பிறீமனுக்கு அரசாங்க சபைத்தேர்தலில் போட்டியின்மைக்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொண்டீர்களா?

## மதிப்புரை.

——:o:——

### கதிரைமலைப் பள்ளு.

கதிரைமலைப் பள்ளு எனவும் கதிரையப்பர் பள்ளு எனவும் வழங்கும் இப் பிரபந்தம் கதிர்காம வேலவர் மீது பாடப்பட்டதாகும்; இது கதிர்காம க்ஷேத்திரத்துள்ள கல்யாணமடஸ்தாபகரான முத்துலிங்க சுவாமிகள் வேண்டுகோளின்படி பாடப்பெற்றதென அறியக்கிடக்கின்றது; இதனைப்பாடிய சிறந்த புலவருடைய நாமம் புலப்படவில்லை. யாழ்ப்பாணத்து வழங்கும் பள்ளுப் பிரபந்தங்களுள் இதுவே முந்தியதென்று பல ஆதாரங்களைக்கொண்டு சொல்லலாகும்; இதன்காலம் 300 வருடங்கட்கு மேற்பட்டதாம். பாக்கள் மிக இனிமையானவும் கற்பனைகள் யாழ்ப்பாணத்தவ வழங்கும் பழமொழிகளோடு விரவியனவாகும். பிற்காலத்ததாகிய பறாளாய் விநாயகர் பள்ளுக்கும் இக் கதிரைமலைப் பள்ளுக்கும் அதிக ஒற்றுமை காணக்கிடக்கின்றது.

இந்த அரிய பிரபந்தமொன்று உண்டென்பதை இவ் யாழ்ப்பாணத்திலும் திருக்கோணமலை முதலிய பகுதிகளிலும் வயல்வேலை செய்யும்போது உழவர்கள் உழத்தியர் இப்பள்ளிற் காணப்படுஞ் சில பாக்களைத் தங்கட்குச் சிரமந்தோறும்படி பாடவும் பாடி வருகிருர்கள் என்று சொல்லவுங் கேட்டுள்ளோமேயல்லாமல் இது பூரணமான ஏட்டுப் பிரதியாக இருக்கின்றதென்றறயாம் கேள்விப்படவில்லை; இது இப்பொழுது, யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க உபதலைவர்களில் ஒருவரும் பிரபல வித்தியும் கலைவிநோதரும் ஈழமண்டலத்துள்ள பழைய அரிய செந்தமிழ் நூல்களைத்தேடி அச்சுவாகனமேற்றித் தமிழகத்தார்க்குப் பயன்பெறச் செய்யவேண்டுமென்ற வேணவா பூண்டவருமாகிய, தெல்லிப்பழை ஸ்ரீ வ. குமாரசுவாமியவர்களால் தாம் அரிதிற் றேடிப்பெற்ற சில ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதனஞ் செய்து, தமிழ்மொழியுள்ள காலவரையில் நின்று நிலவும்படி, யாழ்ப்பாணத்திலும் செந்தமிழிலும் பேரபிமானம்பூண்ட திருமயிலை ஸ்ரீ சே வெ. ஜம்புலிங்கபிள்ளை யவர்களைக் கொண்டு அச்சுவாகனமேற்றுவித்து வெளியிடப் பெற்றதாகும்; இந்நூலகத்து இப்பள்ளின் வரலாறும், கதிர்காம க்ஷேத்திர புராண இதிகாச ஐதிக வரலாறுகளும் பல ஆராய்ச்சிக் குறிப்புகளும் அரும்பதவுரை பிரதான தலங்களின்படம் முதலியனவும் மிகவும் திட்பநுட்பமாகச் சேர்க்கப்பட்டுள்ளன; இந்நூலின் அருமை பெருமைகளை நேரிற் படித்தறிதல் நலமாம்.

இந்நூலையுஞ் சேர்த்து இலங்கையில் மூன்று சிறந்த பள்ளுப் பிரபந்தங்கள் வெளிவந்திருத்தல் தமிழகத்தாரெவர்க்கும் ஆநந்தத்தைத் தருவதாகும். ஸ்ரீ குமாரசுவாமி ஸ்ரீ ஜம்புலிங்கம் எனனுமிவர்கள் செய்து வரும் நன்முயற்சியைப் பாராட்டுகின்றோம். ஸ்ரீ குமாரசுவாமியவர்கள் தங்கட்கு ஈர்வவ ஒன்று குறையை பிற்றென்றசுதப்பிட்டுச் சிறந்து வருக்க

> "கந்தி சேர்கவுன் கைலாசவர்க்குக்
> கண்ணனும் காட்சியுந் தந்து
> குர்ப்பகைச் செவ்வே லேந்தல்சேர்
> கதிராபுரி சேர்ந்தமே
> ஈழ மண்டல
> நாடெங்கள் நாடே".

என்னும் பறுளாய் விநாயகர் பள்ளுச் செய்யுளை நினைந்து இப்படியான தொண்டினைச் செய்தற்கு இடையூறு வாவொட்டாது காத்தருளப் வண்ணம் கதிர்காமத்தையனைப் பிரார்த்திக்கின்ருர்.

> "கையிலார் கைகள் பெற்றுங்
> காலிலார் கால்கள் பெறறும்
> மொய்யிலார் மொய்கள் பெற்றும்
> மூங்கைகள் மொழியப் பெற்றும்
> மையல்சேர் குருடரானோர்
> வாள்விழி பெற்றுஞ் சென்ருர்
> ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்
> கனையதோ வரிதமாதோ"

என்றபிரகாரம் ஆறுமுகனடியார்க்கு உறமிடையூ றில்லையாம்.

பிரதிகள் தெளிவான எழுத்தில் உயர்ந்த காகிதத்தில் இனிது அச்சிட்டு அழகுற வெளியிடப்பெற்றுள்ளன. விலை சதம் 75 (அணு 12) பெறவிரும்புவோர் ஸ்ரீ குமாரசுவாமியவர்களிடத்தும் யாழ்ப்பாணத்துள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளுதலாகும். எமக்குதவிய பிரதியை உவந்தேற்றும்.


வெளிவந்து விட்டது!

## தஞ்சை வாணன் கோவை

சொக்கப்ப நாவலருரை

பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

(வித்துவான் பரீக்ஷை [மதுரைத் தமிழ்ச்சங்கப்] பாலபண்டித பரீக்ஷைகட்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ள இலக்கியம்.)

இப்பதிப்பு, சென்னைச்சர்வகலாசங்கத்தாரால் **வித்துவான்** பட்டம் வழங்கப் பெற்றவரும், யாழ்ப்பாணம் — ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்துப்பரீக்ஷகரில் ஒருவரும் ஆகிய சிதம்பரம் ஸ்ரீமத் ந. சுப்பையபிள்ளை அவர்களால் பல ஏட்டுப் பிரதி கொண்டு திருத்தம் பெற்றது; பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, விஷயசூசிகைமுதலாயின சேர்க்கப் பெற்றது. யாழ்ப்பாணம் - சைவபரிபாலனசபையாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. "பெதர்வெய்ட்" பேப்பர் "டெமி" எட்டுப்பிரமாணங் கொண்ட 400 பக்கங்களை உடையது.

விலை: (காலிகோ பயிண்டு) ரூபா. 3 அணு 8.
,, (சாதா ,, ) ,, 3 —

தபால் (பார்சல்) சார்ஜ் | இலங்கை-இந்தியாவுக்கு அணு—4. மலாய்நாடு முதலியவற்றிற்கு ,, —6.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கமிஷன்கொடுக்கப்படும். பெறவிரும்புவோர், பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
யாழ்ப்பாணம்.

## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street. Colombo. Telephone No. 30.
(Y. 56. 8-2—7-2-36)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் மானிப்பாய் வடக்கு சின்னத்தம்பி நாகலிங்கம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| இ. | தி. | ரூ. | பெயர் ஊர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| | | | 1933ஆ. மார்கழிமீ |
| 1773 | 3 | 21 | ச. விவேகானந்தம் உடுவில் தாலி 1 மோதிரம் 2 |
| 1803 | 18 | 20 | வ. கந்தையா சங்குவேலி இமிற் காசோலை சோடி 1, தாலி 1 |
| | | | 1934ஆ. மாசிமீ |
| 1971 | 11 | 17 | M. யோட்ச் சங்குவேலி காப்பு சோடி 1 |
| | | | பங்குனிமீ |
| 2065 | 25 | 50 | கி. கனகரத்தினம் மானிப்பாய் வெங்களூர்ச் சொலிக ஒற்றை |
| | | | சித்திரைமீ |
| 2094 | 4 | 5) | கி. கனகரத்தினம் மானிப்பாய் வெங்களூர்ச் சொலிக ஒற்றை |
| 2155 | 27 | 35 | வ. சரவணை மானிப்பாய் தூபி சொணடைக்கர் 1 மேற்படி பவுண் 1 |
| | | | ஆனிமீ |
| 2290 | 18 | 8 | க. வல்லி சண்டிலிப்பாய் தாலி 1, தடை 2 |
| | | | ஆடிமீ |
| 2392 | 31 | 10 | வ. செல்வரத்தினம் உடுவில் தாலி 1, குடம் 2 |
| | | | ஆவணிமீ |
| 2429 | 18 | 10 | வி தங்கமுத்து மானிப்பாய் இமிற் காசோலை சோடி 1 |
| | | | புரட்டாதிமீ |
| 2487 | 11 | 15 | க. வி. இளையதம்பி சுவாலி இமிற் புரோச் 1 |
| | | | கார்த்திகைமீ |
| 2580 | 1 | 6 | இ. சிவராம ஐயர் கொக்குவில் இமி மோதிரம் 1 |
| 2589 | 3 | 2) | வி பழனிவேலு இணுவில் தாலி 1, குடம் 2 இமிற் காசோலை சோடி |

விற்பனவு யுவஞு தைமீ 21ந் திகதிக்குச் சரியான (3-2-36) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் ஏற்பட்டதை பிறக்கல் மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

K. பொன்னப்பா,
லைசென்ஸ் மேன்தர்.

(Mis 252 20 & 23-1-36.)

# தீக்குழிப் பாய்தல்.

## லண்டனில் இந்தியர் அபூர்வச் செயல்

### கண்டுநடித்தவர் கதி

(K. C. வீரராகவ ஐயங்கார் M.A.,L.T.)

தமிழ் நாட்டில் திரௌபதி யம்மன் கோயில்களில் வருஷாந்தக் 'கொடை' கொடுக்குங் காலத்தில், பூசாரிகளும் வேறு சிலரும் "தீக்குழிப் பாய்தல்" என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்துவிப்பார்கள். இது தெலுங்கு, கன்னட தேசங்களில் நடைபெறுகின்றது. 20, 30 அடி நீளமும், 1, 2 அடி ஆழமுமுள்ள குழியில் ஜுவாலிக்கும் கங்குகளின் மேல் அடிமேலடி வைத்து நடப்பது எல்லாருக்கும் ஆச்சரியத்தைத் தருவதேயாகும். அச்சம்பவத்தைப் பார்க்கும் ஆங்கிலேயர்களுக்கு ஆச்சரியம் ஒரு பக்கமும், சந்தேகம் ஒருபக்கமும் எழுவது சகஜமாயிருந்தது. சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த காஷ்மீர தேச இளைஞர் குதாபக்ஸ் என்பவர் அங்குள்ள பிரபல அறிஞர்கள் முன்னிலையில் தீக்குழிப் பாய்தலைச் செய்து காட்டினார்.

லண்டன் சர்வகலா சங்கம் என்று உயரிய சங்கம் ஒன்று உளது; அச்சங்கத்துப் பல படிப்புத் துறைகளில் ஒன்று மனத்தத்துவ ஆராய்ச்சியாகும்; அம் மனத் தத்துவ ஆராய்ச்சிக் கழகத்தாரும் வேறு சில டாக்டர்களும் குதா பக்ஸின் தீக்குழிப் பாய்தலை நேரில் சோதிக்க விரும்பினார்கள். அவர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, ஸர்ரே ஜில்லாவிலுள்ள கார்ஷால்டன் என்ற கிராமத்தில், ஒரு சிநேகிதர் வீட்டில், சென்ற செப்டெம்பர் மாதம் 17-ந் தேதி யன்று இச் சோதனை நடந்தது. அங்கு, இரண்டு தீக்குழிகள் வெட்டப்பட்டன. ஒவ்வொன்றும் 12 அடி நீளம், 6 அடி அகலம், 8 அங்குல ஆழம் வாய்ந்தது. டாக்டர்கள் குதா பக்ஸின் காலின் அடிப்பாகத்தைச் சோதித்தனர்; சாதாரணமாக இந்தியர்களின் காலடிப்பாகம் இருப்பதுபோல் இருந்தது; பாதரக்ஷை போட்டுக்கொண்டு நடக்காதவர்கள் பாதம் எப்படி யிருக்குமோ அப்படியிருந்ததாம்; மெதுவாயில்லை; மிகக் கடினமாகவுமில்லை; காலடிப் பாகத்தின் உஷ்ண நிலை 93·2 டிகிரி பாரன் ஹீட்டா யிருந்தது. தோல் ஈரமாயில்லாமல் நன்றாக உலர்ந்திருந்தது.

அவருடைய வலது காலின் அடிப்பாகத்தில் டாக்டர்கள் அரையே அரைக்கால் சதுர அங்குலமுள்ள ஒரு துத்தநாக ஆக்ஸைட் பிளாஸ்திரியை ஒட்டி வைத்தார்களாம். எல்லாம் தயாரானவுடன், குதா பக்ஸ் நிதானமாக, அடியடியாக வைத்து, நடந்தாராம்; ஒவ்வொரு அடியும் நெருப்புடன் ஐந்து செக்கண்டாவது ஒட்டியிருக்க வேண்டுமாம்; நெருப்பின் உஷ்ண நிலை 800 டிகிரி பாரன் ஹீட்டா யிருந்ததாம்; அவர் நடந்து முடிந்தபின் அவரது கால்களை மறுபடியும் சோதித்தார்களாம்; உஷ்ண நிலை 93 டிகிரியே இருந்ததாம்; காலடியில் ஓரிடத்திலாவது தோல் உரிந்தாவது, எரிந்தாவது இல்லையாம். பிளாஸ்திரி வைத்தபடியே இருந்ததாம். பிளாஸ்திரியோரத்திலிருக்கும் நூலின் நுனிப்பாகம் சிறிது கருகியிருந்ததாம்; அப்படிக் கருகுவதற்கு 250 டிகிரி பாரன் ஹீட்டாவது இருந்திருக்க வேண்டுமாம்; அவர் சிறிதும் சிரமமின்றி அறிஞர்கள் அதிசயிக்கும்படி தீக்குழிப் பாய்ந்து சோதனையில் புகழ் பெற்றார்.

அங்கு அப்பொழுது கூடியிருந்தவர்களில் இரண்டு ஆங்கில வாலிபர்கள் தாங்களும் நடப்பதாகச் சொன்னார்கள்; ஒருவர் பத்துத் தினங்களுக்கு முன்பு இம்மாதிரி நடக்க முயன்றார்; அப்பொழுது ஏற்பட்ட கொப்புளங்கள் மாறியிருந்தனவாம். இருவர்களும் இரண்டு அடி நடப்பதற்குள் சூடு பொறுக்கமாட்டாமல் துள்ளி வெளியில் குதித்துவிட்டார்களாம்; அதற்குள் அவர்கள் காலின் அடிப்

(தொடர்ச்சி 6ம் பக்கத்தில்)

# விடுதலை! ஆனால்.....

## தாலிக்கொடி அறுப்புவழக்கில் நீதிபதி கூற்று.

### தொல்புர வழக்கு விசாரணை.

(நமது நிருபர்)

தொல்புரத்தில் வசிக்கும் P. பாறி என்னும் பெண்ணின் தாலிக்கொடியைப் பலாத்காரமாகப் பிடுங்கிச் சென்றான் என்று அல்லூர்வயித்தியலிங்கம் என்பவன் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் சென்ற சனிக்கிழமை குற்றஞ் சாட்டப்பட்டான்.

வழக்காளியையும் சாட்சிகளையும் விசாரணைசெய்தபின் நீதிபதி எதிரியை நிரபராதியெனக் கண்டு விடுதலையாக்கினார். ஆனால் அவனை நோக்கி அவர் பின்வருமாறு கூறினார்:—

"முதன்முதல் உன்னை நான் பார்த்த அளவில் நீ இந்த அக்கிரமத்தைச் செய்திருப்பாய் என்றே நினைத்தேன் ஆனால் சாட்சிகளாய் வந்தவர்கள் உனது அக்கிரமத்தை ருசுப்படுத்தாமையினால் உன்னை விடுதலையாக்குகின்றேன்.

# கள்ள நாணய நோட்டுகள்.

இப்போது இலங்கையில் கள்ள நாணய நோட்டுக்கள் அதிகமாகப் பரவ ஆரம்பித்து விட்டன. முக்கியமாகப் 10 ரூபாய் நோட்டுகளிலேயே கள்ள நோட்டுக்கள் இருக்கின்றன. பொக்கிஷ சாலையிலும் அப்படிப்பட்ட நோட்டுகள் அகப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள் இது விஷயத்தில் ஏமாந்து போகாமலிருக்கும்படி அரசினர் எச்சரிக்கை செய்கின்றனர். திருட்டு நோட்டுகளின் பின்னுல் உள்ள ஊதா வர்ணம் சரியான நோட்டுகளில் உள்ளதைவிட மங்கலாக இருக்கின்றது. மற்றும் அவற்றில் காணப்படும் இலக்கங்களும் தெளிவாக இல்லை.

# ருஷியாவின் ஆயத்தம்.

ஜெர்மனியும் ஜப்பானும் இப்பவோ பின்னையோ தன்னை விழுங்கி விடச் சமையம் பார்த்துக் கொண்டு நிற்கின்றன என்பது ருஷியாவுக்குத் தெரியாமல் இல்லை. எனவே இப்போது தன்னிடம் உள்ள யுத்தளபாடங்களை இரட்டிப்பாக்க ருஷியா முனைந்து இருக்கிறது.

# ஏகாதிபத்தியத் திமிர் கொண்டவர் இறந்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றும் வளர்ச்சியடைந்து கொண்டே வரவேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட மிஸ்ரர் றடியாட்கிப்ளிங் எனும் பிரிட்டிஷ் நூலாசிரியர் சென்ற சனிக்கிழமை மரணமடைந்தார்.

# குவெற்ருவில் மீண்டும் பூகம்பம்.

வட இந்தியாவைச்சேர்ந்த குவெற்ருவில் சென்ற 17உ மீண்டும் ஓர் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டதாம். ஆனால் எவ்விதசேதமும் ஏற்படவில்லை,

# தீண்டாமைக்குச் சாவுமணி

திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தில் ஸ்ரீ குமரன் என்னும் தீண்டா வகுப்பைச் சேர்ந்தவர் உயர்தர நீதிமன்றத்து நீதியாசராக மகாராஜாவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# பையனின் கத்திக் குத்து.

## கொக்குவில் மாணவரின் விளையாட்டு.

### கசையடித் தண்டனை

(நமது நிருபர்)

கொக்குவிலில் வசிக்கும் தம்பித்துரை என்னும் பையன் தனக்கு மைத்துனன் முறை பூண்ட எம். சண்முகரத்தினம் என்னும் 13 வயதுடைய பையனுடைய நெஞ்சிற் கத்தியாற் குத்திக் காயம் விளைத்தான் என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டான்.

மேற்படி இரு பையன்களும் பள்ளிக்கூடத்திற் படிப்பவர்கள் என்றும் கிறிக்கெற் பந்தாட்டத்தின் போது இந்த ஆபத்து நிகழ்ந்தது என்றும் விசாரணையில் சொல்லப்பட்டது.

விசாரணையின்போது காயமடைந்துள்ள எம். சண்முகரத்தினம் என்னும் பையன் பின்வருமாறு கூறினான்:—

'சென்ற 8ம் தேதி பின்னேரம் 4 மணியளவில் கோண்டாவிலில் நானும் இன்னும் சிலருமாகக் கிறிக்கெற் விளையாடிக்கொண்டு நின்றோம். அப்போது நான் எனது மைத்துனனாகிய தம்பித்துரையைக் கேலி செய்தேன். உடனே அவன் பக்கத்தில் கிடந்த தடியொன்றை எடுத்து என் மீது எறிந்தான். "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று அவனைக் கேட்க, அவர் பக்கத்து "விக்கற்" தடியைப் பிடுங்கி என்னை அடித்தார். இதன் பின்னர் கையில் வைத்திருந்த கத்தியைவிரித்து அதனைக் கொண்டு எனது மார்பிற் குத்தினர்."

12 வயதுடைய எதிரியாகிய தம்பித்துரை பின்வருமாறு கூறினன்:—

"சண்முகரத்தினம் என்னைக் கேலி செய்யும்போது, தடி யொன்றை வெட்டிக் கொண்டு நின்றேன் அவன் என்னை அடிக்க நான் கையில் இருந்த கத்தியால் வீசினேன் அந்த வீச்சு அவருடைய மார்பின் மேல் பட்டது."

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியாகிய பையனைக் குற்றவாளியெனக் கண்டு இரண்டு கசையடி விதித்தார்.

# மதம்மாற்ற விரோதமகாநாடு

தீண்டாதாரை மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபடுபவர்களின் அக்கிரமத்தைத் தடுப்பதற்கான மகாநாடு ஒன்று சமீப காலத்தில் பம்பாயிற் கூடும். டக்ரர் அம்பேத்காரின் பிடிவாதக் கொள்கையுடன் சம்மதப்படாத தீண்டாதார் யாவரும் இம்மகாநாட்டிற் பங்கு பற்றுவார் என எதிர் பார்க்கப்படுகிறது ஸ்ரீஜுத் M. R. ஜெயக்கர், ஸ்ரீஜுத் புலபாய் தேசாய், ருவ் பகதூர் M. C. இராஜா, ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் என்னும் இவர்களில் ஒருவர் மகாநாட்டிற்குத் தலைவராகத் தெரிவு செய்யப் படுவர்.

# அறிவித்தல்.

வட்டுக்கோட்டை மேற்கு அமெரிக்க மிஷன் தமிழ்ப் பள்ளிக்கூடத்து முன்பாகவுள்ள எனது சிறியதாயாரால், குடும்பசம்ரக்ஷணைக்காக என் கொடை தர்மசாதனமாகக் கொடுக்கப்பட்ட நமது சொரியல் காணியை, எனது மகன் நடராசா ஐயர் ஈடு வைக்கவோ விற்கவோ பிரயத்தனப்படுகிறதாக அறியக்கிடக்கிறது. ஈடு பிடிக்க வாங்க விரும்புகிறவர்கள் அறியும்படியாக இதனைத் தயவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
S இராசம்மா.

19-1-36.
(Mis 257. 20&23-1-36.)

# அனலைதீவு மகாஜனசபை.

## தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

### அரசினர்க்கு மனு.

இக் கூட்டம் (3-1-36) வெள்ளிக்கிழமை சாயந்தரம் 7 மணியளவில் அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை மண்டபத்தில் திருவாளர் டக்ரர் ஐ. சபாபதிப்பிள்ளை அவர்களின், தலைமையின்கீழ், தேவாரபாராயணத்துடன் நடைபெற்றது.

இம்மகாசபையை உயரிய நோக்கத்துடன் செவ்வனே நடத்திவரு "சற்குணம் தருதியும் திறமையுமுடையவராகிய, அக்கிராசனரையும்; காரியதரிசி, தனாதிகாரி என்பவர்களையும் உள்பட பதினைந்து அங்கத்தவர்கள் கொண்ட ஓர் நிருவாக சபையை நியமித்தல் வேண்டுமெனத் தீர்மானித்து திருவாளர் ஐ. ஆறுமுகம் அவர்களை அக்கிராசனராகவும் திரு சி. தில்லையம்பலம் அவர்கள் உப அக்கிராசனராகவும், திரு. மு. வ. கணபதிப்பிள்ளை அவர்கள் கௌரவ காரியதரிசியாகவும், திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்கள் உப காரியதரிசியாகவும் திரு, வே. ஐயம்பிள்ளை அவர்கள் தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டனர். பின்பு திருவாளர்கள்: ஐ சுப்பிரமணியம், ச பொன்னம்பலம், சு செல்லப்பா, ஐ பெரியதம்பி, சி. தருமலிங்கம், நா. பசுபதி, இ. சுப்பிரமணியம், ச. சிவப்பிரகாசம், க சுப்பிரமணியம், நா தில்லையம்பலம் ஆகிய கனவான்கள் நிருவாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டது.

தற்போது ஊரவர்களுக்கு அத்தியாவசியகம் வேண்டப்படுவதும், அரசாங்கத்தாருக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ள வேண்டியதுமாகக் கீழ்க்காணும் பிரதான விஷயங்களை இக்கூட்டத்தில் முறையானே பிரேரிக்கப்பட்டும சபையோரின் பூரண சம்மதத்துடன் தீர்மானிக்கப்பெற்றது.

1 அனலைதீவுக்கு ஓர் வைத்தியசாலை ஸ்தாபிக்கவேண்டுமெனக் கேட்பது,

2. இவ்வூரில் குறுக்கு ரோட்டுகள், ஒழுங்கைகள் திறப்பதற்குப் போதிய அளவு "கிறுண்டு" உதவி நன்கொடைப் பணத்தைக் கிராமச் சங்கத்துக்குக் கொடுக்கும்படி கேட்பது.

3. மாவரி—இத் தீவுப்பகுதிக்கு ஒரே விகிதமாயிருத்தல் வேண்டுமென்றும், வரி ரூபா 2-50க்கு மேற்படாது குறைக்கத்தரும்படியும் கேட்பது

4 இம்முறை வருகிற அரசாங்க சபைத் தெரிவில் எங்கள் தீவுப்பகுதிக்குத் தகுதியான ஓர் பிரதிநிதியைப் போட்டியின்றித் தெரிந்தனுப்பவேண்டுமெனவும் இக்க விஷயத்தில் பொது ஜனங்கள் ஒத்துழைப்பதாகவும் நிச்சயிக்கப்பட்டது

மேற்கூறியவைகளில் முக்கியமான மூன்று தீர்மானங்களையும் எழுதி அரசாங்கத்தாருக்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பிவைக்கும்படி காரியதரிசிக்கு அறிவித்த பின்பு இரவு 9-30 மணியளவில் கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது. —கடித.

# விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பத்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

# குழந்தையைக்கொன்ற கன்னி.

## கொய்யாத் தோட்டத்திற் கன்னியின் வைபவம்.

### நீதிஸ்தலத்தில்விசாரணை.

[நமது நிருபர்.]

சுண்டிக்குளியைச் சேர்ந்த கொய்யாத் தோட்ட வாசிகளான 1 கந்தையா மகள் செல்லம் 2 பண்டாரி கந்தையா 3 கந்தையா சிவஞானம் 4 முருகேசு செல்லத்துரை என்பவர்கள் பொலிஸ் உதவிப் பரிசோதகர் அற்றிசன்ஸியினல், யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர். 1 வது எதிரியான செல்லம் கன்னிப் பருவத்திலேயே ஓர் மகவைப் பெற்றுக் கொலை செய்தாள் என்பதும், அவளின் இச் செய்கைக்கு மற்றும் 3 எதிரிகளும் உடந்தையாயிருந்தனர் என்பதுமே இவர்கள்மீதுள்ள குற்றச்சாட்டுக்களாம்.

இவ்வழக்கில் செல்லத்துரை பெண் சின்னம்மா என்னும் பெண் பின்வருங் கருத்துப்படச் சாட்சியங்கூறினள்.

நான் கொய்யாத் தோட்டத்தில் வசிக்கிறேன். கந்தையாவின் மகள் செல்லம் எனது மருமகள். அவள் இப்போது சிவில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருக்கிறாள். சென்ற 4 அல்லது 5 மாதங்கட்கு முன் அவள் கெர்ப்பவதியாயிருக்க அவதானித்தேன். இதைப் பற்றி அவளுடைய மாமியாருக்கு அறிவித்தேன். நான் செல்லமிடம் இதைப்பற்றி விசாரித்தால் ஏசுவாள் என்று கேட்கவில்லை. சென்ற புதன்கிழமை காலை 4 மணியளவில் நித்திரை விட்டு எழுந்து பார்த்தபோது (திருந்தையில் படுத்திருந்தேன்) செல்லம் எனது அறையிற் படுத்திருக்கக் கண்டேன் அந்த நேரத்தில் நான் அவளைக் கவனமாய்ப் பார்க்கவில்லை. அந்த வளவில் இரண்டு வீடுகள் உண்டு. செல்லம் சில நேரங்களில் எனது வீட்டு அறையிலும் நித்திரை செய்வது உண்டு அன்று 12 மணியளவில் அவள் படுத்திருந்த இடத்திலும் பாயிலும் இரத்த அடையாளங்களைக் கண்டேன். ஏன் அறை இப்படி அழுக்காக இருக்கிறதென்று சத்தமிட்டேன். செல்லத்தின் தாயார் சத்தம் கேட்டு அவ்விடத்துக்கு வந்தாள். அவள் உடனே பாயை மகளைக் கழுவச் சொல்லி விட்டுத் தானே மாட்டுச் சாணத்தால் அறையை மெழுகினள் நான் செல்லத்தின் சேலையிலும் இரத்தம் கண்டேன் அப்போது அவள் பிள்ளையைப் பெற்று விட்டதாக யூகித்துக் கொண்டேன். செல்லம் தனது தாய்தகப்பன் வீட்டில் வசித்தவள், அது இந்த வீடு அல்ல."

இதன் பின் கந்தையா பெண் தங்கம் கூறிய சாட்சியமாவது

"இரண்டாம் எதிரியாகிய கந்தையாவுக்கு இரண்டு வைப்பாட்டிமார் உளர். இருவரும் ஒரே இடத்தில் அவருடன் வசிக்கிறார்கள். நான் அவருடைய வைப்பாட்டியல்லாமல் சமையஆசாரமுறைப்படி அல்லது பதியப்பெற்ற மனைவியல்ல. அடுத்தவள் எனது மூத்த சகோதரி. செல்லம் கந்தையாவின் மற்ற வைப்பாட்டி பொன்னு என்பவளுடைய மகள் செல்லம் எங்களுடன் தான் இருக்கிறவள். அவள் குளிக்கும்போது அவளுடைய வயிறு பெரிதாக இருந்ததைக் கண்டு சந்தேகம் கொண்டு கேட்டேன். அவள் அதற்கு வழக்கமாகத் தனக்கு அப்படித்தான் இருப்பதாகச் சொன்னாள்."

இத்துடன் விசாரணை தவணையிடப்பட்டது.

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.

இலங்கையிலும் ஓர் செஞ்சிலுவைச் சங்கம், சென்ற வெள்ளிக்கிழமையன்று இலங்கைத் தேசாதிபதியின் மனைவியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஞு
தைமீ ௭௨ திங்கட்கிழமை

## ஏனைய பிரிவிலும் இப்படிச் செய்தால்!

இலங்கை அரசாங்கசபையின் ஊர்காவற்றுறைப் பகுதிச் சனப் பிரதிநிதியாக ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்கள், வேறு அபேட்சகர்களின் எதிரிடை யில்லாமையால், சென்ற புதன்கிழமையன்று (15 - 1 - 36) அதாவது நியமன தினத்தன்றே தெரிவு செய்யப் படலாயினர். இப்படி எதிரிடையின்றி ஒருவர் தேர்தல் செய்யப்பட்டமை, நமது யாழ்ப்பாண மக்களின் உள்ளத்திலே சிறந்த புத்துணர்ச்சியைக் கிளரச் செய்யாது விடமாட்டாதென்பது நிசம். பிரதிநிதித் தேர்தற் காலங்களில், அபேட்சகர்களின் எதிரிடை காரணமாக விளையும் பணச் செலவும், ஏற்படும் சிரமமும், கிளரும் மனஸ்தாபமும் குரோதமும், மூளும் பிணக்கும் சண்டையும், உண்டாகும் ஏனைய அனர்த்தங்களும் கொஞ்சமல்லவென்பதை இங்குள்ள மக்கள் எல்லாரும் பிரத்தியட்சமாகக் கண்டு வருகின்றார்களல்லவா?

வடமாகாணத்திற்கு அரசாங்க சபையின் சனப்பிரதிநிதிகள் ஐவர் வேண்டுமானால், தனித்தனி அவ்வைந்துபிரிவிலுமுள்ள சனங்கள் ஒருங்குசேர்ந்து தீர்க்காலோசனை செய்து தாங்கள் தக்கவரெனக்கண்ட ஒவ்வொருவரை நிச்சயித்து அனுப்புவதே முறையாகு மென்பதை அற்றைநாட் டொடக்கம் இற்றை நாள் வரையில் இப்பத்திரிகையிற் பன்முறை முறையிட்டு வரலானேம்; ஆனல் இந்த அரிய இதோபதேசத்திற்குச் செவி கொடுப்பவர் எவரையுங் காணேமே! உலகத்திலே சீர்திருந்தியது என்று இருக்கும் எந்த இராச்சியத்திலும் இப்படிப்பட்ட தேர்தற் காலங்களிலே பல அபேட்சகர்கள் முற்பட்டு நிற்பதும் ஒவ்வொருவர் பொருட்டு அவரவரைச் சேர்ந்தவர்கள் கட்சி கட்டி நிற்பதுஞ் சகசந்தானே; இதனை நாங்கள் ஒழித்து விடுதல் முடியுமா? கலகம் பிறந்தாற்றானே நியாயம் பிறக்கும் என்று இவ்விஷயத்தில் எவரும் எண்ணக் கூடும். ஆனல் இந்த விஷயத்தில் நாம் சிந்திக்க வேண்டியது ஒன்றுண்டு; இங்கிலாந்து முதலிய தத்துவ ராச்சிய நாடுகளில், பாராளுமன்றம் போன்ற பெருஞ் சபைத் தேர்தல்கள் நடக்கும் போது மேலே சொல்லப்பட்ட எதிரிடைகளும் கட்சிப் பிரிவுகளும் பிணக்குகளும் ஏனைய அனர்த்தங்களும் ஏற்படுதல் சகசமாக, இந்தச் சின்ன யாழ்ப்பாணத்தில் இல்லையேல் இலங்கையில் அப்படி ஏற்படாமலிருக்க முடியுமோ வெனின், அப்படியன்று. இங்கிலாந்து முதலிய இராச்சியங்களிலே அவைகள் ஏற்படுங் காரணங்களும் வேறு அங்கே ஒவ்வொரு அபேட்சகர்களும் ஒவ்வொரு பிரதானமான கொள்கையையும் ஒவ்வொரு பெரிய கட்சியையும் தனித்தனி சேர்ந்தவர்களாவர்; அந்தக் கொள்கையுங் கட்சியுமுடையவர்கள் தாம் தாம் எடுத்துக் கொண்ட அவைகளை நிலைநாட்டுவதற்காகவே அப்படியான முயற்சிகளைச் செய்கின்றார்களாம்.

இங்கெனிலோ அப்படியன்று; இவர்களுக்குக் கொள்கைகள் நோக்கங்கள் யாதும் இல்லையெனலாம். ஏதும் நோக்கம் இவர்களிடத்து இருக்குமானல் அது எல்லார்க்கும் ஒரே நோக்கமாகும். அந்த நோக்கம் எல்லாரும் அறிந்த இரகசியம்; அதனை விட இன்னுமொரு நோக்கம் இருக்குமானல் அது போலிப்புகழைப் பெறும் நோக்கமாகும். வேதனம் போலிப்புகழென்னும் இவைகளை விட வேறு ஏதேனும் நோக்கங் கொண்டு ஒருவர் அரசாங்கசபையிற் புகுந்தாலும் அவர் அச் சபையிற் செய்யத் தக்கது யாதுமில்லை யெனலாம். ஏன்? அச் சபைகள் ஆளுஞ் சாதியாரைக் கொண்ட சபைகளாகும்; இச்சபை ஆளப்படுஞ் சாதியாரைக் கொண்ட சபையாகும். ஆதலால் நாம் எண்ணியபடி இச்சபையிற் செய்ய முடியாதென்பது வெளிப்படை. இங்குள்ள அபேட்சகர்களுக்கும் அவரவர் பரிவாரத்தினர்க்கும் இடையேயுள்ள எதிரிடை, அதிக சனக் கூட்டமான காலத்திலே புகையிர ஸ்தானத்திற் பிரயாணச் சீட்டுக்களைப் பெறுதற்குப் பிரயாணிகள் ஒருவரையொருவர் இடித்துந் தள்ளியும் வைதும் முற்பட்டுக் கொண்டு பிரயாணச் சீட்டு உதவப் படும் துவாரத்திற்குச் சமீபமாகப் போக முயலுதலை ஒக்குமெனலாம். ஈற்றில் அவர்களெல்லாருடைய நோக்கமும் புகைரத வாயிலாகப் பிரயாணஞ் செய்தலாகிய ஒரே நோக்கமல்லவா?

இனி, டொனமூர் அரசியன் முறையைச் சனங்களுக்கு விளங்கப்படுத்துங்கள், தமிழ்மக்களின் ஈடேறத்தையிட்டுச் செய்யவேண்டிய கருமங்களை ஊரவர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள், அரசாங்கசபையிற், போய்சேரநேர்ந்தால் நீவிர்செய்யவிருக்கும் நன்மை தீமைகளை வாக்காளருக்கு வெளிப்படையாகச் செப்புங்கள் என்று இப்படிப் பன்முறை நம்போல்வார் சொன்னலும் இடித்துரைத்தாலும் இவ் வபேட்சகர்கள் அவற்றைக் கேட்கப்போவதுமில்லை. இவர்கள் செய்வதுதான் என்ன? நல்வழியாலோ, தீவழியாலோ தமக்கு அபேட்சகர்களை அதிகமாகச் சேர்த்துக் கோள்வதுதான். ஆனதினற்றான் இப்படியான அனர்த்தங்கள் வீண் செலவுகள் வேண்டாமென்கின்றேம்.

இவை மாத்திரமா? எதிரிடையோடு கூடி அபேட்சித்து நிற்பதனல் வாக்காளர் கைலஞ்சம் வாங்கப் பழகுவர்; மனச் சாட்சியைக் கொன்று தம் பிறப்புரிமையை மறந்து மதுபானத்தின் பாற்பட்டு மதியிழந்து தகாதார்க்கு வாக்குக் கொடுக்க முற்படுகின்றனர்; பரஸ்பரம் நண்பர்களாயிருந்தவர்கள் இத் தேர்தல் விஷயத்திற் கட்சி பிரிந்து நின்று வீண்வாதம் பேசி ஈற்றிலே தீராப் பகைவராய்ப் பேதப் படுகின்றனர்; ஒரு அபேட்சகருக்கு விரோதமாக அன்னெரு அபேட்சகருக்குச் சார்பாகக் கருமமாற்றியவரை வாக்குச் சொன்னவரை முந்திய அபேட்சகர் பகைமை சாதித்துச் சாந்துணையும் அவருக்குச் சமையம் வாய்க்கும் போதெல்லாம் இடர் செய்ய முயல்வதையும் சிற்சிலர் விஷயத்தில் அநுபவத்திற் காணலாகுமே. ஊர்காவற்றுறைப் பகுதி விஷயத்தில இப்பொழுது நடந்த தேர்தலில் இவைகள் ஒன்றேனும் இல்லாமற் போய்விட்டனவல்லவா? ஆனதனற்றான் ஏனைய பிரிவிலும் இப்படிச் செய்தால் நன்மையாகு மென்கின்றேம்.

---

### இதிலும் மதமாற்றமா?

மேன்மாகாணத்தைச் சேர்ந்த ரத்மலான என்னுமிடத்திற் குருட்டுப் பிள்ளைகளையும் செவிட்டுப் பிள்ளைகளையும் கல்வி பயிற்றுவதற்கான ஒரு வித்தியாசாலையுண்டு; இந்த வித்தியா தாபனத்தை வைத்து நடாத்துபவர்கள் ஐயசேகரா வின் மனைவி முதலாகச் சொல்லப்பட்ட தடித்த கிறிஸ்தவர்களாம். இதற்கு அரசினர் காலந்தோறும் உதவும் விசேஷ நன்கொடைப்பணமும் உண்டு; இவ்வளவோடு அமையாது இக்கலாசாலை யதிகாரிகள் இலங்கையிலுள்ள பௌத்தர் சைவமக்கள் இஸ்லாமானவர் கத்தோலிக்க கிறிஸ்தவர் முதலாம் சகல சமய வாதிகளிடத்திலும் இச் சமயவாதிகளால் நடாத்தப்படும் வித்தியாசாலைகளிற் கல்வி பயிலும் மாணக்கரிடத்தும் கல்வி பயிற்றும் ஆசிரியர்களிடத்தும் காலந்தோறும் குறித்த குருடர் செவிடர் வித்தியாசாலையின் பொருட்டுப் பணஞ்சேர்த்து வருகிறார்கள்: மேலும் அந்த வித்தியாசாலையில் பௌத்தம் சைவம் இஸ்லாம் மார்க்கம் கிறிஸ்துவம் முதலிய பல மார்க்கத்தையுஞ் சேர்ந்த குருட்டுப் பிள்ளைகளும் செவிட்டுப்பிள்ளைகளும் கல்வி பயின்று வருகிறார்கள். இக்காரணம் பற்றித்தான் சகல மார்க்கத்தவர்களும் அந்தத் தாபனத்திற்குப் பொருளுதவி வருகின்றார்கள்.

இவை இங்ஙனமாக, சென்றவாரம் கழுத்துறை வடக்குப் பௌத்தர் ஐக்கியசங்கக் கூட்டம் கூடியபோது வித்தியாபகுதி மந்திரியான மிஸ்ரர் C. W. W. கன்னங்கரா தலைமை வகித்திருந்தார். அக் கூட்டத்தில் மேற்படி சங்கக் காரியதரிசியாகிய மிஸ்ரர் H. A. அப்பு என்பவர் கீழ்வரும் முறையீட்டைச் செய்தனர்.

"ரத்மலானவிலுள்ள குருடர் செவிடர் பாடசாலையிற் பௌத்தமதப் பிள்ளைகள் பலர் கல்விபயின்று வருகின்றனர். அப்பிள்ளைகளை மேற்படி வித்தியாசாலை யதிகாரிகள் கிறிஸ்து மதத்திற்கு இழுக்கின்றார்களென்று இச் சங்கத்தினர் அறிந்து, அதனைத் தடுக்கும்படி, குறித்த வித்தியாசாலையிற் பௌத்தமதப் பிள்ளைகளின் வழிபாட்டிற்கான ஒரு மண்டபத்தை இச்சங்கப் பொறுப்பில் அமைப்பதற்கு அநுமதிதால்வேண்டுமென்று நாம் பலமுறை கேட்டோம். அதற்கு, அக் கலாசாலை அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். மேலும் அப்பௌத்தப் பிள்ளைகளையும் கிறிஸ்தவரல்லா வேறு சமயப் பிள்ளைகளையும் [illegible] வித்தியாசாலை அதிகாரிகள் ஞா[illegible]மைதோறும் கிறிஸ்தவாலயத்திற்கு நடத்திச் சென்று வழிபாடு செய்விக்கின்றார்களெனக் கேள்விப்பட்டு, அதன் அதிகாரியாகிய ஐயசேகரா மனைவிக்கு எழுதினேம். அந்த மனுஷி கேட்டதற்குப் பதில் எழுதுவதை விடுத்துப் பிடிகொடாமற் பொருந்தா விடை யெழுதி யுள்ளனள். இப்படியெல்லாஞ் செய்தல் பெரிய அடாத்தான செயலாதலின் இதனைப் பற்றி அரசினருக்கு முறையிடுதல் ஆவசியகமாகும்" என்பதே.

மேலே சொல்லப்பட்ட குருடர் செவிடர் வித்தியாசாலையின் பொருட்டு வருடந்தோறும் யாழ்ப்பாணத்துள்ள சைவ மக்களிடத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிபோன்ற சைவவித்தியாதாபனங்களிலுள்ள உபாத்தியாயர்கள் மாணக்கர்களிடத்திலும் பெருந்தொகைப் பணம் சேர்த்து அனுப்பப்படுவதை நாம் நேரில் அறிவோம். இங்கே இந்தப் பணத்தைச் சேர்த்து அந்த அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுட் பிரதானமானவர்கள் கச்சேரி உத்தியோகத்தர் இன்னுஞ் சில அபிமானிகளாவர். இவர்களாயினும் இவர்கள் சொற்கேட்டுக் கல்லூரிகளிலும் வித்தியாசாலைகளிலும் உள்ள உபாத்தியாயர்கள் மாணக்கரிடத்திற் பணஞ்சேர்த்துப் பயபக்தியோடு கொடுக்கும் தலைமையாசிரியர்களாயினும் இதனைப்பற்றி எப்போதாயினுஞ் சிந்தித்ததுண்டா? தாங்கள் சேர்த்துக்கொடுக்கும் ஒவ்வொரு சதமும் தம் சமயத்திலுள்ளவர்களை அந்நிய சமயத்திற்கு இழப்பதற்குப் பயன்படுகின்றனவென்ற உண்மையையிட்டு யோசித்தார்களா? சில உத்தியோகத்தர்களையும் இன்னுஞ் சில பெண்களையும் பிரியப்படுத்த வேண்டி முகமன் பாராட்டி, பொருள் சேர்த்தனுப்புவது முறையா? இனிமேல் மேற்படி அதிகாரிகள் குறித்த பாடசாலையின் பொருட்டுப் பொருள் சேர்க்க வரும்போது சைவமக்களாயுள்ளார் ஒரு சதமேனும் ஈவரேல் அதுவே சமயத்துரோகமாகும்.

## கண்ணேட்டம்.

### காரணம் என்ன?

கந்தர்மடம் [illegible] வித்தியாசாலைக்கு இனி நன்கொ[illegible]பணம் உதவுவதில்லை என அரசினர் தீர்மானித்துவிட்டதாக சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த "ஈழகேசரி" பத்திரிகையில் ஓர் அறிக்கை காணப்படுகின்றது. இவ்வித்தியாசாலையே யாழ்ப்பாணத்தில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட சைவத் தமிழ் வித்தியாசாலையாகும் இப்படித் தொன்மை வாய்ந்த இவ்வித்தியாசாலைக்கு இனி நன்கொடை உதவுவதில்லை என அரசினர் திடீரெனத் தீர்மானித்தமைக்குக் காரணம் என்ன வென்பதை நாம் அறியேம். ஆனல், இவ்வித்தியாசாலை இவ்வளவு காலமாயும் சைவச்சிறுர் பலர்க்குக் கல்வி விஷயத்தில் பெரும் உதவி செய்திருக்கிறது. எனவே, அனேக வித்தியாசாலைகள் இருக்கின்றன என்ற காரணத்தைக் கொண்டு அரசினர் உதவி நன்கொடையை நிறுத்துவதற்கு நியாயம் இல்லை. அரசினரின் இச் செயல் சிறப்பாகக் கந்தர்மட வாசிகளுக்கும், பொதுவாக யாழ்ப்பாணத்தவர்க்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது இது விஷயத்தில் அரசினர் புனராலோசனை செய்து நன்றென்பதைக் கைக்கொள்வார் என்பதே எமது திடமான நம்பிக்கையாகும். இனனும், இவ்வித்தியாசாலை மானேஜராயுள்ள ஸ்ரீ கா. அருளம்பலம் அவர்கள் இது விஷயமாகப் பொதுஜனங்களுக்கு ஓர் அறிக்கை விடுவாரெனக் காத்திருக்கின்றேம்.

---

### மன்னர் பிரான் சுகவீனம்.

எமது அரசராகிய மாட்சிமை தங்கிய 5 வது ஜோர்ஜ் சக்கரவர்த்தியின தேககிலைமை சற்றுக் கவலைக்கிடமாயிருக்கிறதென்பது பிந்திக் கிடைத்துள்ள தந்திச் செய்திகளினல் தெரியவருகிறது. முடியாட்சி வீழ்ந்து சர்வாதிகார ஆட்சி நிலவும் இக்காலத்தில எமது சக்கரவர்த்தியவர்கள் எவ்வித இன்னலும் இன்றி பரிபாலனஞ் செய்து வருவது ஒன்றே அன்னவரின சாதுரியத்திற்கும் பாரத்தியாகத்திற்கும் தக்க சான்று ஆகும். 25 ஆண்டு காலத்திற்கு மேலாக ஜோர்ஜ் சக்கரவர்த்தியார் ஜனநாயக ஆட்சி முறைக்குப் பங்கம் நேரிடாதபடி இங்கிலாந்தையும் ஏகாதிபத்தியத்தையும் தம்மால இயன்றவரை பரிபாலித்து வந்திருக்கிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது. மன்னர் பிரான இப்போது நேர்ந்திருக்கும் சுகவீனத்தினின்று தப்பி, இன்னும் பலகாலம் எம்மைப் பரிபாலிப்பதற்கு எல்லாம்வல்ல பரமகருணாநிதியாகிய இறைவனை இறைஞ்சுகின்றேம்.

---

### ஊர்காவற்றுறைப்பகுதிச் சனப்பிரதிநிதி.

யாழ்ப்பாணத்திலே பிரபல நியாயவாதியும் தமிழ்ச் சனத் தலைவருள் ஒருவருமாகிய ஸ்ரீ வை. துரைசுவாமியவர்கள் வேறு அபேட்சகர்களின் எதிரிடையின்றி ஊர்காவற்றுறைப்பகுதிச் சனப்பிரதிநிதியாக நியமனதினத்தன்றே தேர்தல்செய்யப்பெற்றுள்ளனர்; ஸ்ரீ துரைசுவாமியவர்கள் இலங்கைச் சட்ட நிருபணசபையிருந்த காலத்தும 1921-ம் ஆண்டு தொடக்கம 11 வருட காலமாக யாழ்ப்பாணச் சனப்பிரதிநிதியாகத் திறமையோடு தொண்டாற்றிவந்தவர். ஸ்ரீ துரைசுவாமியவர்கள் எவ்வெவ்வகையான எதிரிடையுமின்றித் தேர்தல் செய்யப்பட்டமையே அவருடைய பிரதிநிதித்துவத்திறமையையும தமிழ்மக்கள அவர்மீது வைத்துள்ள நம்பிக்கையையும இக்காலத்துள்ள தமிழ்த் தலைவருள் அவரே சிறந்தவரென்பதையும் வெளிப்படையாகக் காட்டுகின்றன இவர் தமது கொள்கை நியதியெனுமிவைகளில் திறம்பாத் தன்மை பூண்டவர்; டொனமூர் விசாரணைச் சங்கத்தின் விளைவாகவந்த இந்த அரசாங்கசபையைத் தொடக்கத்தில் யாழ்ப்பாண மக்களுட் பெரும்பாலார் பகிஷ்காரஞ் செய்த போது ஸ்ரீ துரைசுவாமியவர்களும சனங்களின் கொள்கையை ஒட்டி அவர்களோடு பகிஷ்காரஞ் செய்த தலைவர்களுள் ஒருவராக நின்றவர்; பகிஷ்காரஞ் செய்த அபேட்சகர் சிலர் பின்னர்த் தம் மனம்மாறி அரசாங்க சபையுட் பிரவேசிக்க முயன்ற போதும் பிரவேசித்த போதும் ஸ்ரீ துரைசுவாமியவர்கள் தம் நியதியிற் பிறம்பாது தூரத்திலேயே நின்றுவிட்டார். இப்பொழுது சனங்கள் எல்லாரும் கேட்டுக்கொண்ட பிரகாரம அரசாங்கசபையில் சனங்கள் பொருட்டுத் தொண்டாற்றும் வண்ணம முன்வந்துள்ளார். தமிழ்மக்கள் ஸ்ரீ துரைசுவாமி வாயிலாகப் பல நன்மைகளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

## உள்ளூர்ச் செய்திகள்.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

தைப்பொங்கல் விடுதலைநாட்கள் கழிந்துவிட இற்றைத்தினத்து இக் கல்லூரி ஆரம்பித்திருக்கின்றது; முன்னர் இப்பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் "இன்ரர் ஸயன்ஸ்" இன்ரர் "ஆர்ட்ஸ்" வகுப்புக்கள் இங்குத் தொடங்கப்பட்டுள்ளன சைவச் சிறுமிபரும் இக்கல்லூரியிற் சேர்ந்து பயிலுதற்கான ஒழுங்குகளெல்லாம் செய்யப்பெற்றுள்ளன. அனுபவமுந் திறமையும் வாய்ந்த இரு ஆசிரியைகள் இன்று தொடக்கமாக இங்குக் கல்வி பயிற்றலாயினர். சைவாபிமானிகளாயுள்ளாரனைவரும் தங்கள் சிறுவர்களை யனுப்புவதோடு சிறுமியரையும் இக் கல்லூரிக்கு அனுப்பிச் சைவ முறைப்படி கல்வி யூட்டுவிப்பாராக.

---

### வெளிச்சமில்லா வண்டி

சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில், உடுவிலில் வசிக்கும் வயிரவன் இராமன் என்பவன் பகிரங்க வீதியால் வெளிச்சமில்லாமல் ஓர் மாட்டுவண்டியைச் செலுத்திச் சென்றான் என்ற குற்றச்சாட்டுக்கு எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் நீதிபதி அவனுக்கு 15 ரூபா அபராதம் விதித்தார்.

---

### இந்து சமயப் பிரவேசம்.

தெல்லிப்பழை வாசரும் கோட்டை அரசினர்பாடசாலை ஆசிரியருமாகிய திரு. S. K. நாகநாதி என்பவர் 3-1-36 தொடக்கம் தான் முன்னிருந்த கிறீஸ்த சமயத்திலிருந்து விலகி இந்துசமயத்திற் பிரவேசித்தமை காரணமாகக் கீரிமலைச் சிவன்கோயிலுக் கருகாமையில் 3-1-36 காலை $9\frac{1}{2}$ மணியளவில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இவ்வைபவத்திற்குத் திராவிட மஹா வித்துவான் ஸ்ரீ. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் தலைமை வகித்தார் சமஸ்கிருத மஹாவித்துவான பிரம்மஸ்ரீ சிவசாமிஐயரவர்கள் குறித்த பிரவேசகாரரை அபிஷேகஸ்நானஞ் செய்வித்து இந்துசமயத்தின் உண்மைப் பொருள்களை விளக்கினர்.

பின் வித்துவான் பாரதியார் அவர்களால் 'சைவசமயத்தின் மாண்பு' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த சொற்பொழிவாற்றப்பட்டது. சுன்னாகம் வழக்கறிஞர் திரு. K. V. சின்னத்துரை திரு. குமாரசூரியர், தெல்லிப்பழை திரு. குலத்துங்கபிள்ளை, கொழும்பு சென்ற் யோசேப் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. குருநாதபிள்ளை முதலிய பல பிரமுகர்களும் இன்னும் நூற்றுக்கணக்கான சைவசமயாபிமானிகளும் பல ஆசிரியர்மாரும் சமுகமாயிருந்தனர். சமுகமாயிருந்த அனைவர்க்கும் தாம்பூலம் சந்தனம் பன்னீர் முதலியன இனிது வழங்கப்பெற்றதும் பகல் $1\frac{1}{4}$ மணியளவில் வைபவம் இனிது நிறைவுற்றது.

---

விளம்பரம்.

யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 1.
புதிய நாட்டுச் சிலா சாஸனத்திரட்டு வெளிவந்துவிட்டது. இதுசெல்வேலிச் சைவவித்தியாசாலையிலும், பழுத்தீவிலும் மற்றும் [illegible] விலை ரூபா 1-75 சதம்.

யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 2.
1937ம் ஆண்டு தமிழ் J. S. C வகுப்புக்குரிய இலக்கியக் குறிப்புக்கள். இருசெல்வேலியிற் கற்பிக்கும் திறமையுள்ள ஆசிரியரொருவரால் எழுதப்பட்டு அச்சாகின்றன. விரைவில் வெளிவரும்.
Mis 254. 19-1-36 to 18-2-36.

# இத்தாலியர்களின் சீர்கேடு.

## அபிசீனியாவுக்கு இயற்கை உதவி

### வல்லரசுகளின் நோக்கம் என்ன? வழவழா நியாயம் கூறுவதன் மர்மம்.

அபிசீனியா சந்தேகம் | இற்றலிக்கு வெற்றி?
சமாதானத்துக்கு நிபந்தனை | அபிசீனியரின் மறுப்பு

### இங்கிலாந்து – பிரான்ஸ் ஒத்துழைப்பு.

#### இத்தாலிய இராணுவச் சீர்கேடு.

"ரெயினல்ட்ஸ் வீக்லி" பத்திரிகையில் பிரிகேடியர்ஜெனரல் கிரோஸியர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"இத்தாலிய இராணுவம் சீர்கேடடைந்து விட்டது. இந்தச் செய்தி உண்மையானதென்று நம்பக்காரணங்கள் உள. பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் இதைப்பற்றி ஆலோசனை செய்துவருகின்றனர். அவர்களும் முஸோலினியின் பாஸிஸ்டு மகாசபையினரும் இதனால் கலவரமடைந்திருக்கின்றனர்.

(1) போர்முனைக் கிப்பாலிருக்கும் இத்தாலிய சிப்பாய்கள் குழப்பமடைந்திருக்கின்றனர். ஆயுதங்களையும் போர்முனைகளுக்கனுப்பும் விஷயத்தில் போதிய போக்குவரத்து வசதிகளில்லாமல் அவர்கள் அளவற்ற கஷ்டங்களுக்குள்ளாகி யிருக்கின்றனர்.

(2) சுதேசிகள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. முடிவில் அவர்கள் இத்தாலிக்கு விரோதமாகத் திரும்பிவிடக் கூடும்.

(3) இத்தாலியர் வசமான இடங்களில் சட்டமும் ஒழுங்கும் ஏற்படுத்தப்படவில்லை. விசேஷ போலீஸ் ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருப்பதால் இத்தாலிய சைக்கியம் குறைகிறது.

(4) இத்தாலிய அதிகாரிகளுக்கு இராணுவ உணர்ச்சியில்லை.

(5) இவ்வருஷம் இத்தாலியர் தலை நகர்போய்ச் சேரமுடியாது எந்தக் காலத்திலாவது அவர்கள தலைநகரத்தைப் பிடிப்பார்களா வென்பதும் சந்தேகத்துக்கிடமான விஷயம்.

மழைகால மாரம்பித்துவிட்டால் இத்தாலியர் யுத்தமாரம பிக்கும் போது இருந்தவிடத்திற்கப்பால் போகவியலாது. வடக்குப்போர் முனையில் இன்னும் சில வாரங்களுக்கு இத்தாலியர் முன்னேற முடியாது அபிஸீனியர்கள் இத்தாலியரைத் தாக்கவாரம்பித்து விட்டனர். இயற்கையும் அவர்களுக்குச் சாதகமாக விருக்கிறது. இப்பொழுது மழையாரம்பிக்கவில்லை யெனினும் போர் முனையில் மூடுபனி அதிகமாகவிருக்கிறது. இத்தாலிய விமானங்கள் போய்வர மூடுபனி பெரும் தடையாகும். விமானிகள் இதைப் பொருட்படுத்தாது சென்ருல் ஆபத்துக்குள்ளாவர். பீரங்கி உபயோகத்தை நிர்வகிப்பதும் கஷ்டம்.

#### பிரான்ஸ்—பிரிட்டன் ஒத்துழைப்பு.

மத்தியதரைக்கடலில் பிரிட்டிஷ் கடற்படையை இத்தாலியர் தாக்குவதாக விருந்தால் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கையைப்பற்றி பிரெஞ்சு பிரிட்டிஷ் அதிகாரிகள் கீழ்க்கண்ட முறைகளை நிர்ணயித்திருப்பதாக 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகையின் அரசியல் நிருபர் அறிவிக்கிறார்,

பிரெஞ்சுகடற்படையின் கேந்திரஸ்தானங்கள், துறைமுகங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றை பிரிட்டன் உபயோகித்துக்கொள்ளலாம்.

பிரெஞ்சு சைந்யத்தில் சென்ற இரண்டுவருஷத்தில் சேர்ந்தவர்கள் சேவைக்கு அழைக்கப்படுவர்.

விமானமூலம் இத்தாலியர் தாக்குவரென்று தெரியவந்தால் உடனே தகவல் கொடுப்பதற்கு அநுகுணமாக பிரெஞ்சு விமானப் படைத் தந்தியதிகாரிகள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் சொற்படி நடப்பர்.

#### 4000 அபிசீனியர்கள் மரணம்.

இற்றலிய உத்தியோகதோரணையில் கீழ்க்கண்ட செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது:—

"கனல் தோரியாவில் நடைபெற்ற யுத்தத்தில் இற்றலியர்களுக்குப் பூரணமான வெற்றி கிடைத்தது 4 அபிசீனியர்கள் கொல்லப்பட்டனர்; மீதமுள்ள எதிரிகள் ஓட்டம் பிடித்தார்கள். இத்தாலிய காலாட்படை தாங்கிப்படை பீரங்கிப்படை ஆகாயப்படை ஆகிய எல்லாப்படைகளும் பரிபூரணமாக ஒத்துழைத்ததின காரணமாக எதிரிகளுக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன ஏராளமான எதிரிகள் சிறை செய்யப்பட்டார்கள். ஏராளமான துப்பாக்கிகளும் யந்திரத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன, இத்தாலியர்களுக்குக் கொஞ்சச் சேதமே ஏற்பட்டது. இத்தாலியர்களின் தாக்கில் போர்செய்த சுதேசிப்படைகளின் தீரத்தை எவ்வளவு போற்றினும் தகும்"

#### இத்தாலியர்களுக்கு வெற்றி

தெசி நகருக்கு வடக்கே நூறு மைல் தூரத்திலுள்ள ...காரம் என்னும் ஊர்மீது இத்தாலிய ஆகாயவிமானங்கள் வெடி குண்டுகளைப் பொழிந்தன. சென்ற வியாழக்கிழமை காலட்ஜு என்னுமிடத்தை இத்தாலிய ஆகாயப் படையினர் வெடிகுண்டுகளால் தாக்கியபோது செஞ்சிலுவை வைத்திய உதவிப் படை நாசமடைந்தது; 14 பேர்கள் கொல்லப்பட்டார்கள்; 35 பேர்கள் காயமடைந்தனர்.

#### துண்டுப்பிரசுர விநியோகம்

அதே இடத்தில் இத்தாலிய ஆகாய விமானங்கள் ஆகாயத்திலிருந்து ஆயிரம் துண்டுப்பிரசுரங்களை எறிந்தன. யுத்தத்தில் நாசமான எல்லாத்தேவாலயங்களையும் மீண்டும் புதுப்பித்துக்கொடுப்பதாக அத்துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

#### ஸ்வீடன் கடிதம்

ஸ்வீடன் செஞ்சிலுவைக் கோஷ்டி வெடி குண்டு வீச்சுக்குள்ளாக்கப்பட்டதை யெதிர்த்து ரோமிலுள்ள ஸ்விடிஸ் ஸ்தானிகர் ஒரு கடிதத்தை இத்தாலிய அரசினருக்குக் கொடுத்திருப்பதாக வெகாட்டுக் காரியாலயத்தார் அறிவிக்கின்றனர். இத்தாலியர் சமாதானத்தை ஸ்வீடன் ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் வெடிகுண்டு சம்பவத்தைப்பற்றி உடனே விசாரணை செய்து அதிக்கிரமத்தைத் தண்டிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கஷ்ட ஈடு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க ஸ்வீடன் அரசினர் உரிமையை நிறுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

#### 30000 அபிசீனியப் படைகள் பயணம்

டோலோ பிரதேசத்தில் இத்தாலியர்களுக்கு பகத்தான வெற்றி கிடைத்துவிட்டதென்று இற்றலியர் கூறுவது உண்மையல்லவென்று எத்தியோப்பிய அதிகாரிகள் மறுக்கின்றனர். அங்கு நடைபெற்ற யுத்தத்தில் ராஸ் டெஸ்டாவின் படைகள் 4000 பேர்களே இருந்தார்களென்றும், கனல், தோரியா நதிக்கரையில் டோலோவிலிருந்து 40 மைல் தூரத்தில் ஒரேயொரு பெரிய எத்தியோப்பியப் படைதான் இருந்ததென்றும் அவர்கள் கூறுகிறார்கள். தெற்குப் போர்முனையிலிருந்து கடைசியாக வந்துள்ள செய்தியானது, ராஸ்டெஸ்டா படைகளை நடத்திச்செல்வதற்காக இருந்துவந்த கஷ்டங்களை அவர் ஓரளவு சமாளித்துவிட்டாரென்று தெரிவிக்கிறது. ராஸ்டெஸ்டாவின் படையுடன் சேர்ந்துகொள்ள அதிகமாக இன்னும் 30000 பேர்கள் தெற்குப் போர்முனை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

#### சமாதானப்பேச்சு வேண்டாம்

எண்ணெய் நிர்ப்பந்தத்தை இற்றலி மீது விதிக்க வல்லரசுகள் பின்வாங்குகின்றன. எனவே நிர்ப்பந்தப் பிரச்சினையினின்றும் தப்புதற்காக அவை சமாதானம் பேச ஆரம்பிக்கும் என அபிசீனிய அரசினர் சந்தேகம் கொள்ளுகின்றனர். எனினும் சமாதானம் என்றால் பின்வரும் நிபந்தனைகளை முதலிற் பூர்த்தியாக்க வேண்டும் என அபிசீனியச் சக்கரவர்த்தி வற்புறுத்துகின்றனர்.

3. சண்டையை நிறுத்தி, இற்றலி அபிசீனியாவை விட்டு உடனே வெளியேற வேண்டும்.

2. அந்நியர் உதவியைச் சக்கரவர்த்தி பெறலாம். அல்லது பெறுமல் விடலாம் உதவி பெற்றாலும், இற்றலியர் உதவி அவர்க்குத் தேவையில்லை.

3. சர்வதேசசங்கத்து ஆதரவில் அபிஸீனியாவின் பொருளாதாரவிருத்திக்கேற்ற நடவடிக்கைகளைக் கையாளுதல். ஆனால் அபிஸீனியர்க்கு விரோதமாக அந்நியர்க்கு விசேஷ சலுகை காட்டப்படமாட்டாது.

4. அபிசீனியாவுக்கு ஓர் துறைமுகம் வேண்டும்: அத்துறைமுகத்திற்குச் சர்வாதிகாரி சக்ரவர்த்தியாவர்.

#### தேகவியோகம்.

மிஸ்ரர் கென்ஸ் செல்வத்துரை அவர்களின் பத்தினியார் சென்ற இரவு வண்ணார்பண்ணையில் உள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினர். இவர் இறக்கும்போது வயது 62. இச்சந்தர்ப்பத்தில் அவளைப் பிரிந்துதுன்புறும் கணவன் புத்திரர் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபமுறுகின்றோம்

#### வீட்டுக்கு நெருப்பு.

சங்கானை மேற்கில் வசிக்கும் (1) சந்திரன் மயிலன் (2) முருகேசு ஞானி யென்பவர்கள் அவ்வூர் இராமலிங்கம் பெண் லெட்சுமி என்பவளுடைய வீட்டுக்குச் சென்ற ஐப்பசி 25ம் திகதி நெருப்புவைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பெரியகோட்டில விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்பின் இரு எதிரிகளும் நீதிபதியால் நிரபராதிகளெனக் கண்டு விலக்கப்பட்டனர்.

## இந்திய அரசியற் குறிப்புக்கள்

#### ஸ்ரீ ஜ. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

காங்கிரசின் பழைய தலைவரும், சில வருஷ காலமாக இராஜிய விஷயங்களிற் கலந்து கொள்ளாதிருந்தவருமான ஸ்ரீ ஜ. ஸ்ரீநிவாச ஐயங்கார் மீண்டும் அரசியல் விஷயங்களிற் கலந்து கொள்ள முற்பட்டு விட்டார். இராஜேந்திரபாபு சமீபத்தில் கூறிய வியாக்கியானத்தை அநுசரித்து, சென்னை மாகாணக் காங்கிரஸ் சபையிலும், அகில இந்தியக் காங்கிரஸ் நிர்வாக சபையிலும் ஸ்தானம் வகிக்க இப்போது நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமையினால் அவர் இப்போது மேற்படி இரு சபைகளிலும் அங்கத்தவராகி விட்டார். ஸ்ரீ ஜ. ஐயங்கார் லக்ஷ்மணபுரி காங்கிரஸ் மகாநாட்டுக்கும் செல்லுவார்.

#### ஆகாகான் பொன் விழா.

முஸ்லீம்களில் ஒரு வகுப்பினரின் தலைவராய கனம் ஆகாகானின் பொன் விழாவைக் கொண்டாட பம்பாய், கராச்சி முதலாம் இடங்களில் துரித ஏற்பாடுகள் நடக்கின்றன. கனம் ஆகா கான் இப்போது லண்டனில் இருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இந்திய அரசியற்பிரச்சினை சம்பந்தமாக ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின்வருமாறு அவர் கூறினார். "எது எப்படியிருந்த போதிலும் புதிய அரசியலை நாம் நிர்வகித்து நடத்த வேண்டியே இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள் என்னும் இருபிரதான ஜாதியாரும் பரஸ்பரம் ஒற்றுமை பூண்டு தமக்குள்ளேயிருக்கும் பிணக்குகளைத் தவிர்த்தல் வேண்டும். இப்போது தான் மகாத்மா காந்தியடிகளின் சேவை ஆவசியகம் வேண்டற்பாலது. இச்சந்தர்ப்பத்தில் மகாத்மா அரசியலில் தலைமை வகித்துக் கர்மம் ஆற்ற வேண்டும்.

#### புதியஇராஜப்பிரதிநிதி.

இந்தியப் புதிய இராஜப் பிரதிநிதியான லின்லித்கோ பிரவு ஏப்ரல் மாதம் தமது கடமையை ஏற்பர். அவர் இந்தியாவுக்கு வந்ததும், அவர்க்கு ஓர் வரவேற்புபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கவேண்டும் என்று பம்பாய் நகரசபை தீர்மானித்திருக்கிறது.

#### "இந்தியத் தாயின் முகம்."

"இந்தியத் தாயின் முகம்" என்னும் பெயருடன் அமெரிக்காவைச் சேர்ந்த மிஸ் மேயோ ஓர் நூல் வெளியிட்டிருக்கிறாள் இந்நூல் ஆபாசம் நிறைந்துள்ளதாயும், பாரத மக்களின் மனத்தைப் புண்படுத்த ஏதுவாயிருப்பதாலும், அதன மீது இந்திய அரசினர் ஓர் தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

#### மகாத்மா காந்தி.

மகாத்மாகாந்தி பம்பாய்க்கு வந்துவிட்டார். அவர் பலங் குறைபவராயிருந்த போதிலும், உற்சாகமுடையவராய்க் காணப்பட்டார் பம்பாயில் அவருடைய பற்களிற் சிலபிடுங்கப்படும் என்று தெரிகிறது.

#### ௩௭—வது தமிழ் மாகாண அரசியல் மகாநாடு காரைக்குடி.

1936-ம் ௵ ஜனவரி ௴ 25, 26 (யுவ௵ தை௴ ௧௨ ௧௩) தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ௩௭-வது தமிழ் மாகாண அரசியல் மகாநாடு, காரைக்குடி ஷண்முக விலாஸ் தியேட்டரில் திருமதி. ருக்மணி லெட்சுமிபதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திருமதி. கமலாதேவி சட்டோபாத்யாய அவர்கள் கொடியேற்று விழா நிகழ்த்த இசைந்துள்ளார்கள் என்று வரவேற்புக் கழகத்தலைவர், ஸ்ரீ மெ. ராம. மெய்யப்பச் செட்டியாரும் பொதுக்காரியதரிசி ஸ்ரீ சா. கணேசனும் எமக்கு அறிவிக்கின்றார்கள்.

## ஜப்பானின் வெளியேற்றம்.

### மகாநாட்டின் பயன் என்ன?

### ஆயுத ஸ்வீகரணப் போட்டி

(சு - மி - ன்)

நாம் எதிர்பார்த்தபடியே நடந்துவிட்டது. கடற்படை மகா நாட்டிலிருந்து ஜப்பான வெளியேறிவிட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா இவற்றிற்குச் சரி சமத்துவமான கடற்படைப் பலத்தைத் தான் வைத்துக்கொள்ளுவதற்கு இதர தேசங்கள் சம்மதிக்காததே ஜப்பான் கடற்படை மகாநாட்டிலிருந்து வெளியேறியதற்குக் காரணம். கிரேட்பிரிட்டன் வீசிய நயவஞ்சக வலையில் மாட்டிக்கொள்ள அது விரும்பவில்லை. ஜப்பான் இந்த மகாநாட்டிலிருந்து வெளியேறிவிட்டாலும், ஜெர்மனியையும், ருஷியாவையும் சேர்த்துக்கொண்டு, ஐந்து தேச மகாநாட்டுக்குப் பதிலாக ஆறு தேச மகாநாடாக இதைச் செய்துவிட யோசனை யிருந்துவருவதை நாம் அறியாமலில்லை. அவ்விரு தேசங்களையும் இந்த மகாநாட்டில் சேர்த்துக்கொண்டு, ஒரு உடன்படிக்கையையும் செய்துகொள்ளலாம். ஆனால் எந்த நோக்கத்துடன் இந்த மகாநாடு கூட்டப்பட்டதோ அந்த நோக்கம் கைகூடாமற் போய்விடும். மகாநாட்டிலிருந்து விலகிக்கொண்டுவிட்டாலும கடற்படை பலத்தைப் பெருக்கிக்கொள்ளும் போட்டியில் தான் இறங்கப்போவதில்லையென்றும், முன்போலவே உலக சமாதானத்தைப் பெருக்கவும், இதர தேசங்களுடன் சிநேகபாவத்தை அதிகப் படுத்திக் கொள்ளவுமே தான் விரும்புவதாகவும் ஜப்பான் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அவ்விரு துறைகளிலும ஜப்பான் இதுவரையில் என்ன செய்து வந்திருக்கிறதென்பதை சீனாவில் அது நடத்திபிருக்கும், நடத்திவரும திருவிளையாடல்களிலிருந்தே எல்லோரும் அறிந்துகொள்ளலாம். எனவே, அதனுடைய உறுதிமொழியில் எந்த அளவு நம்பிக்கை வைக்கலாமென்பதை நிதானிப்பது கஷ்டமல்ல. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சரிசமத்துவமான கடற்படை உரிமையை அதற்குஅளித்தபோதிலும், எல்லாத்தேசங்களும் வைத்திருக்கக் கூடிய கடற்படை பலத்தின் அளவைக் குறைப்பதற்கு ஜப்பான் சம்மதிக்கும்படி செய்வதன் மூலம் கடற்படை பலம் உலகில் குறைவதற்கு வழி செய்திருக்கலாம். ஆனால் இங்கிலாந்தும், முக்கியமாக அமெரிக்காவும், குறுகிய திருஷ்டியைக் காட்டிக்கொண்டு விட்டதன் மூலம் அதற்குவாய்த்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டன. இனி ஜப்பான் கடற்படை பலத்தை பெருக்கிக்கொண்டுவிடப் போகிறதே யென்ற பயத்தினால் இதரதேசங்களும் முக்கியமாக இங்கிலாந்தும் அமெரிக்காவும் அந்தப்பலத்தைப் பெருக்கிக்கொள்ளப் போகின்றன. ஜப்பானும் அவற்றின் வழியைப் பின்பற்றப் போகிறது. எனவே, கடற்படை பலம் உலகில் அதிகரிக்கப்போகிறது. இதுதான் கடற்படை மகாநாட்டின் மொத்தப்பலன்.

## தீக்குழிப் பாய்தல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகம் வெந்து கொப்புளங்கள் நிரம்பிவிட்டனவாம். அவர்கள் காலடிப்பாகம் உலர்ந்திராமல் ஈரமாயிருந்ததாம்; ஒரு கங்குத் துண்டு ஒருவருடைய காலில் ஒட்டிக்கொண்டுவிட்டதாம்; அதனடியில் கால் சிறிது எரிந்திருந்ததாம்; ஒருவர் பெயர் டிக்பி மாய்காக்; மற்றொருவர் பெயர் மாரிஸ் கிப்பல இருவர்களும் நடக்க முடியாது திகைத்தனர்.

மேலே சொல்லிய விஷயங்கள் செயிண்ட் மேரி ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் புரொபசர் வி. வ. பானட் என்பவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் காணப்படுகின்றன. இவர்கள் நடக்கும் படத்தைக் காண விரும்புகிறவர்கள், "இல்லஸ்டிரேட் லண்டன் நியூஸ்" என்ற பத்திரிகையின் 28-9-35 சஞ்சிகையில், 511-ம் பக்கத்தைப் பார்க்கவும்.

## கொழும்புப் பொலிஸ் நீதிபதி

வடமத்திய மாகாணத்து உபதலைவரான மிஸ்டர் J. N. ஆறுமுகம் கொழும்புப் பொலிஸ் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இப்போது கொழும்புப் பொலிஸ் நீதிபதியாயுள்ள மிஸ்டர் R H D மாண்டர்ஸ் நெடுங்கால லீவில் தம் ஜெனனதேசம் செல்கின்றார்.

## மஞ்சள் மழை.

மத்திய இந்தியாவில் சம்பாளி என்னும் இடத்திற் கருகாமையில் இப்போது சிலநாட்களாக மஞ்சள் நிறத்தில் மழை வர்ஷித்ததாம். இதனை யிட்டு அங்குள்ளவர்கள் மிகவும் ஆச்சரியம் உறுகின்றனர்.

## தேர்தற் றினங்கள்.

பருத்தித்துறைப்பகுதித் தேர்தல் பிப்ரவரி மாதம் 24ம் தேதி நடைபெறும். யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதித் தேர்தல் பிப்ரவரி 25ம் தேதி நிகழும். காங்கேசன்துறைப் பகுதித் தெரிவு ஷை மாதம் 27ம் தேதி நடக்கும், மன்னார் முல்லைத்தீவுத் தொகுதித்தேர்தல் மார்ச்மாதம் 3ம் தேதியாகும்.

## சக்லத்வாலா இறந்தார்.

பலவருட காலமாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமதர்மகட்சி அங்கத்தவராக ஸ்தானம் வகித்த சப்பூர்ஜி சக்லத்வாலா என்னும் இந்தியர் சென்ற வெள்ளிக் கிழமை தேகவியோகமானார்.

## Not:ce of Sale

### விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் இலக்கம் 1511

புலோலி கிழக்கு யோசேப் எட்வேட் வழக்காளி,

எதிராக.

1. சிறுவிளான் சவரிமுத்து அந்தோனிப் பிள்ளையும்,

2 கொழும்பு 102-ம் இலக்கக் கடல்தெரு K. M. S. S. சின்னையாச் செட்டியாரும் எதிராளிகள்.

இதன் பின்னூற் காணப்படும் ஆதனம் கொம்மிஷனர் கு. வேலாயுதர் நாகலிங்கம் ஆகிய என்னால் 1936-ம் ஆடு மாசி மீ 8-ந்வ. சனிக்கிழமை காலமே 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சி மேற்குப் பகுதி பண்டத் தரிப்பு கோயிற் பற்று சிறுவிளானிலிருக்கும் அக்கந்தனை வலப்பரப்பு 6½ இதற்கு ஆட்சிப்படி கலப் பரப்பு 5½ செய்பயிர் வான்பயிர்கள் பனையும் எல்லை கிழக்கு-கற்பாடு, வடக்கு வள்ளியம் பிள்ளைமகள்பெண் அன்னம்மாவுக்கும் ஆசைப் பிள்ளை மகள் பெண் மரியைப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள் மேற்கு ரோட்டு தெற்கு ஆசைப் பிள்ளை பெண் ஆறுசிப்பிள்ளைக்குரிய ஆதனம் இது அடங்கலும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் சற்குரிய பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்,

1936-ம் ஆடு தைமீ 8-ந் உ.

கு. வே. நாகலிங்கம், கொம்மிஷனர்.

Mis 255 20-1-36.

# மில் அரிசியின் கேடு.

## யந்திர ராட்சதனால் நமதுகேவல நிலமை.

## நாமேதேடிய வறுமை.

## கைக்குற்று அரிசி

---o---

## கவியரசர் தாகூரின் நற்செய்தி.



டாக்டர் ரவீந்தரநாத் தாகூர் விஸ்வபாரதியில் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரமாவது:—

ஜனங்களின் உணவானது தன்னுடைய சொந்த தரித்திரத்திற்கே காரணமாயுள்ள ஒரு கேடான வழியைத் தேடிவைக்குமானால் அந்நியர்களின் அதிகாரம் நமக்கு எத்துணைகேட்டை விளைக்குமோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான நிஷ்டூரத்தை அது நமக்கு விளைவிக்கிறது. நாம் நம்முடைய பலம், ஆரோக்கியம், ஊக்கம் புத்தி சாலித்தனம் முதலிய எல்லாவற்றையும் அதன் மூலமாகவே அடைந்திருக்கிறோம். ஆனால் விசேஷமாக நம்முடைய ஜாதியின் உயர்தர வகுப்பினர்களுக்குள் மௌடீகம் என்ற கொள்ளை ரோகம்பரவி அந்த ஆகாரத்தின் அருமையான புஷ்டியுள்ள அம்சங்களைத் தொலைத்துவிட்டது. அரிசி மில்கள் மாகாணம் பூராவும் பயங்கரமாகப் பரவி வருகின்றன. மரணத்தை உண்டாக்கக்கூடிய மலேறியா முதலிய வியாதிகளோடு அவை சுத்தமான புனிதமில்லாத சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்த ஆகாரத்தின் புஷ்டி தரக்கூடிய அம்சங்களை பலவீனப்படுத்தி ஜனங்களின உயிர் நிலையையழித்து விடுகின்றன. தினம் நாம் ஆகாரத்தைக் கொதிக்க வைப்பதால் புஷ்டியுள்ள அம்சங்கள் அதை விட்டுப்போவதுமல்லாமல் பலமானயந்திரங்களைகொண்டு நல்ல பலத்தைத் தரக்கூடிய அம்சமாகிய அதன் தவிட்டையும் நீக்கிவிடுகிறோம். ஏற்கெனவே பால் நெய் முதலானவைகளில்லமல் அவஸ்தைப்படும் ஜனங்கள் இந்த வறுமையையும் தாங்களாக வேண்டுமென்றே விளைவித்துக்கொண்டிருக்கின்றனர். பெரி-பெரி என்னும் வியாதியால் வங்காளிகள் பெரும்பாலும் அவஸ்தைப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இன்னும் அவர்கள் பாடம் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. சட்டத்தை இயற்றி இந்த அபாயகரமான நிலைமையை முன்னரே வர வொட்டாமல் தடுக்கவேண்டுமென்று பிரஸ்தாபமிருந்து வந்ததாக எனக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் அது தோல்வியடைந்ததைப்பற்றி நான சந்தோஷப்படுகிறேன். ஏனெனில் ஜனங்களை அனவரதமும் தாதிகளால் காப்பாற்றப்படும் குழந்தைகளைப் போன்று பாவிக்கக்கூடாது; நல்ல ஆரோக்கியமான சௌக்கியத்தைக் கொடுக்கக்கூடிய உணவுகளைத் தெரிந்தெடுக்க நாமே நம்முடைய பகுத்தறிவை உபயோகித்துக் கொள்ளவேண்டும். ஆரோக்கியமான உணவுகளால் உண்டாகக்கூடிய தேகவலுவும் பலமும் பெருமதிப்பிற்குரியது. பிறகு கிராமப் பொருளாதார வாழ்வின் முக்கியத்தை நாம் கவனிக்கவேண்டும். இரும்பு என்ற ராக்ஷசனுனவன் நம்முடைய கிராம ஸ்திரீகள் தொழிலாளர்கள் முதலியவர்களின் இயற்கையான தொழில் மார்க்கத்தின் குறுக்கே நின்று வழிமறிக்கின்றான்; ஆகையால் வங்காளத்தில் தொண்டர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கைக்குற்று அரிசியைத்தான் உபயோகிப்பதென்று பிரதிக்ஞை செய்துகொள்ளவேண்டும். அதைச் சமைத்து அதன் சத்துக்களை வீணாகப்போக்கடிக்கக் கூடாது. நாம அன்றாடம் நம்முடைய வீடுகளில் ஆத்மகதகமான ஒரு முறையை ஏற்படுத்திக்கொண்டு தேசத்தின் துன்பங்களையும் ஆபத்துக்களையும் நிலைநிறுத்துகிறோமென்பதை அவர்கள் உணரமாட்டார்களா?

## கத்தி வீச்சு.

### சிவியாதெருவில் அடிபிடி

### நால்வர்க்கெதிராக வழக்கு.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சென்ற 16—1—36 வியாழக்கிழமை பொலிஸ் நீதிபதி திரு. K. அழ்வாப்பிள்ளை முகதாவில் சிவியாதெருவில் வசிக்கும் சக்காரபர் என்பவரை அவ்வூர் (1) கதிராமர் (2) செல்வத்துரை, (3) மரியம்மா (4) அன்னம்மா ஆகியவர்கள் கத்தியால் குத்திக் காயப்படுத்தின எனக் குற்றம் சாட்டப்படடனர்.

இவ்வழக்கிற் சாட்சியாகச் சாமி பெண் அன்னம்மா பின்வருமாறு கூறினாள்:

"சென்ற 10-ந் திகதி காலை 9 மணியளவில் நான எனது வீட்டில் இருக்கும்போது ஏதோ சத்தம் கேட்டது. உடனே நான ஒழுங்கைக்கு ஓடிவந்தேன். எனது வீடு கொஞ்சதூரத்திலிருக்கிறது. (1) அன்னம்மாவும் (2) மரியம்மாவும் சக்காரபரைக் கட்டிப் பிடிக்கச் செல்வத்துரை அடித்தார் பின் 1-ம எதிரி கதிராமர் ஓர் கத்தியால் குத்தினார். அது ஒரு கோப்பிக்கத்தி; நான் போகும்போது கத்தியால் கழுத்துக்கு வெட்ட எத்தனித்தார். அப்போது வழக்காளி தடுத்தார்."

எதிரி கூறியதாவது:—

"வழக்காளி பக்கத்தார் எல்லாருமாக எனக்கு அடித்தவர்கள் நான் அந்தநேரத்தில் கள்ளுச் சேர்க்கச் சென்றேன். சக்கிரானும் மனுவனுமாக எனக்கு அடித்தவர்கள் சக்காரபர் எனது தலைமயிரைப் பிடித்து என்னை அமர்த்திக்கொண்டார். அப்போதும் எனக்கு அடித்தார்கள். அடி பொறுக்க முடியாமல் என்னிடமிருந்த கத்தியால் வீசினேன்.

வழக்குத் தவணையிடப்பட்டது.

## மன்னர்பிரான் சுகவீனம்.

### வைத்தியரின் பரபரப்பு.

### நிலமை ஆபத்து இல்லை

நமது மன்னர் பிரான், சுவாசக்குழாய் சம்பந்தமான நோயினால் பிடிக்கப்பட்டிருக்கிறார் என நேற்றைத் தினம் கிடைத்துள்ள தந்திச் செய்தி ஒன்றினால் அறியக் கிடக்கின்றது.

அரண்மனை வைத்தியர் மூவரும் அரசர் மாளிகையிலேயே சென்ற சனிக்கிழமை யிரவு முழுவதும் தங்கியிருந்தனர்.

மன்னர் பிரானின் நிலைமை ஆபத்தானதல்ல என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

## அறிவித்தல்.

யாழ்ப்பாணம் நகரசங்க எல்லைக்குள் நமது பத்திரிகைச் சந்தாப்பணம் விளம்பரப் பணங்கள் என்பனவற்றை அறவிட ஸ்ரீ R. P. சதாசிவம் என்பவர் நமது பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை அபிமானிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

மனேஜர்.
இந்துசாதனம்.

இந்துசாதனலயம்
10 - 1 - 36.

## தேவை.

கொடிகாமம் றெயில்வே ஸ்டேசனுக்குச் சமீபமான கட்டைபறித்தான் பிள்ளையார் கோவிலில் இருக்கும் குருக்கள், மகளுடைய சுகவீனத்தினால் வேலையை விடுகிறார். இன்னொரு பிராமணப் பூசகர் வருகிற மாசி மீ 1-ம் திகதி தொடக்கம் தேவை. இரண்டுகாலப் பூசை; காலையில் ஒரு படி அரிசி நிவேதனம்-நிவேதனம் பழம் பாக்கு வெற்றிலை இரண்டு காலமும், இருட்டும் வெளிச்சமும் இருக்கும்போது பூசையாக வேண்டும். இனப்படி பூசகர் பொறுப்பு; கோவிலிற்குரிய வீட்டிற் குடியிருக்க வேண்டும். சம்பளம் (தொடக்கம்) மாசம் 17½ ரூபா வருஷம் வீதம் 2½ ரூபா கூடி 25 ரூபா வரைக்கும் போகும் கிரமமான சம்பளம் குடும்பத்தோடு இருக்கவும் வசதி. கோவிலுக்கருகாமையில் ஆஸ்பத்திரி இருக்கிறது. சுகயீனங்களுக்கெல்லாம் தேவையான மருந்துகள் லேசில் கிடைக்கும்; உடனே எழுதவும்.

செ. சி. குமாரசுவாமி
கொடிகாமம்
பிருந்தாவனம்
15-1-36.

Mis 253 20-1-36

## கரையூரில் அடிபிடி.

### சட்டிபானை யுடைத்தபின் சண்டித்தனம்!

### சாட்சிகளின் கூற்று.

(நமதுநிருபர்.)

கரையூர் வாசிகளான (1) ஜோசப் (2) சோதி என்பவர்கள், இன்னும் சிலரின் உதவியைக் கொண்டு அவ்வூர் தம்பிப்பிள்ளை என்பவரைப் பொல்லால் அடித்துக் காயப்படுத்தினதுமன்றி அன்னவர் வீட்டில் இருந்த சட்டிபானைகளையும் ஏனைய பொருள்களையும் உடைத்தெறிந்தார்கள் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர்.

அப்போது மனுவல் என்பவனின் மனைவியாகிய செல்லம் என்பவள் வழக்காளிபக்கச் சாட்சியாகப் பின் வருமாறு கூறினாள்.

"மேலே சொன்ன எதிரிகள் வந்து எனது வீட்டிலுள்ள சட்டிபானைகளை உடைத்ததுமல்லாமல் வேலியையும் பிடுங்கினர். அவர்கள் "உன்னுடைய மகன் எங்கே என்று கேட்டனர்" இதற்கிடையில் தம்பிப்பிள்ளை அந்த இடத்துக்கு வந்தார். சோதி அவனைக் கட்டிப்பிடிக்க யோசப் அவனுடைய தலையில் ஓர் பொல்லால் அடித்தார். சனங்கள் அவ்விடத்துக்கு வந்து அவர்களைப் பிடித்துவிட்டார்கள். நான் பொலிஸ்தானத்துக்குச் சென்றேன்.

நிக்கிலான் வெலிச்சோர் கூறியதாவது "நான் கடற்கரையோரமாய்ப் போய்க் கொண்டிருந்தேன். அடிபிடிச்சத்தம் கேட்டது அந்த இடத்திற்குச் சென்றேன். அப்போது சோதி, தம்பிப்பிள்ளையைக் கட்டிப்பிடிக்க யோசேப்பு ஓர் தடியால் தலையில் அடிக்கக் கண்டேன்."

இத்துடன் வழக்கு வருகிற வியாழக்கிழமைக்குத் தவணையிடப்பட்டது.

## பெண் நொத்தாரிஸ்

சென்ற வாரம் நிகழ்ந்த நொத்தாரிஸ் பரீட்சையில் ஸ்ரீமதி என். சாந்தநாயகி என்னும் பெண்மணியும் ஒருத்தியாவர். இப் பெண் இன்னும் சில நாட்களில் தமிழ் நொத்தாரிசவாகக் கடமை ஏற்பாராம்.

## திருக்கோணமலைத் தெரிவு.

மட்டக்களப்பு திருக்கோணமலைத் தொகுதித் தெரிவு பிப்ரவரிமாதம் 22ம் திகதி நிகழும் என்று அறிகிறோம். இத்தொகுதிக்கு ஸ்ரீ M. M. சுப்பிரமணியமும், ஸ்ரீ E. R. தம்பிமுத்துவும் போட்டியிடுகின்றனர்.


# இனாம்!

## இந்துசாதனத் தேதி அட்டவணை 1936.

1936-ம் ஆண்டிற்குரிய இந்துசாதனத் தேதியட்டவணை வழக்கம்போலச் சகல விபரங்களோடும் அழகுறத் தொகுக்கப்பட்டு வெளிவந் திருக்கிறது; குறித்த அட்டவணையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கவியரசர் ரவீந்திரநாததாகூர், பண்டிதர் மதன்மோகன் மாளவியா என்னும் பெரியார் மூவருடைய பிரதிமைப் படங்கள் தனித்தனி அமைந்துள்ளன. (31-3-36) முடிய தங்களால் வரவேண்டிய கிரயத்தை "நிலுவை" யின்றி நிகழும் யுவவருஷம்தைமீ ௩0-ம் (12—2—36) தேதிக்குமுந்தி அனுப்பிவைக்கும் அபிமானிகட்கு, 50சதம் விலைகொண்ட இந்தத் தேதியட்டவணை (தபாற்செலவுதானுமின்றி) "இனா"மாக அனுப்பப்படும்; புதிய அபிமானிகளாய்ச் சேர விரும்புவோர்க்கும் இது நல்ல சமையமாகும்.

இந்துசாதனலயம்,
12—12—35.


மனேஜர்.

சுகந்தருவது-சிக்கனமுள்ளது-வல்திரமானது!

ஆனதால் உமது

பணத்தை "ஆஸ்ரின்" காரில்

இடுவதே புத்தி!



இந்த ஆஸ்ரின் ரகங்களோ பணமுட்டின்றி வசதியாக
வாங்கத்தக்கன. பார்க்க அழகானவை
இப்படியான வேறு இரதங்கள் இப்போது கிடையா
திரும்ப விற்கும்போதும் நல்லவிலைக்கு விற்கலாம்.

---

உவாக்கர் ஸன்ஸ் & Co.
கொழும்பு, கண்டி, தலவாக்கொல்லை
பண்டாரவளை, இரத்தினபுரி, காலி

---

யாழ்ப்பாணம்,
முல்லைத்தீவு, மன்னார், திருக்கோணமலை, புத்தளம், அநுராதபுரம்
ஆகிய பிரிவுகளுக்கு முழு ஏஜண்டுகளாயுள்ளவர்கள்:-

V. செல்வத்துரை & ஸன்ஸ்
ஆஸ்பத்திரி றோட்டு,
யாழ்ப்பாணம்.

Y 137. 23-9-35. — 18-8-36

## மருந்துச் சரக்குகளின்
### விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை பார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் பேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்ச ஒன்றுக்கு | தோல ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- ம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சஒன்றுக்கு சதம் —50
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சருள் தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை சாம்பிறாணி பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சருட்டுக் கோடாச் சரக்குகளைகளும் பலவிதமான திறம் ஊதுவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டாக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெறவிரும்புவோர், நான்கிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்,

ஆ. இராசையா,

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.

## அது மெய் அல்ல.

சாவகச்சேரி
வெள்ளப் பிரச்சினை.

சங்கத்தலைவரின் அரியசெயல்.

இந்துசாதனப் பத்திராதிபர்
அவர்கட்கு:

ஐயா,

9–1–36 ல் வெளிவந்த இந்துசாதனத்தில் "நம்மவர் பிடிவாதம் அன்னியர் ஆதாயம்" என்னுந் தலையங்கத்தின் கீழ் ஓர் படித்த சாவகச்சேரிக் கிராமச்சங்கத் தலைவரையும் தலைமைக்காரரையும் கண்டித்து எழுதியுள்ளார். அதிற் சொல்லப்பட்டவைகள் முழுவதும் உண்மையற்றவைகளென்று தங்களுக்கு தெரிவிக்கிறேன்; இப்பகுதியிலுள்ள அநேக ஒழுங்கைகள் தண்ணீர்பாயும் வாய்க்கால்களாகவு மிருக்கின்றன. இதுபோலவே கற்குளி ஒழுங்கையும் மழை காலத்தில் தண்ணீர் பாயும் வாய்க்காலா யிருக்கிற தென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த ஒழுங்கை—வாய்க்கால் தலைப்பில் சென்றவருஷத்தில் முன்னிருந்த அக்கிராசனரால்மட்டிபோட்டு உயர்த்தப்பட்டது இது உயர்த்தப்பட்டபடியால் தண்ணீர்ப் பாய்ச்சல் தடைப்பட்டிருந்தது. வெள்ள மிகுதியால் கஷ்டப்படுபவர்களின் வேண்டுகோளினிமித்தம் கிராமச்சங்கத் தலைவர் குறித்த ஒழுங்கையால் அவ்வெள்ளத்தைக் கற்குளி வெளிக்குப் பாய்ச்சினர். இச் செய்கையால் யாதாமொருவருக்கும் ஓர் கஷ்டமும் நிகழவில்லை. கடிதரால் சொல்லப்பட்ட செருக்கலில் வெள்ளத்தைப் பாய்ச்சுவற்கு சென்ற 3 வருஷங்களுக்கு முன் இதே மார்க்கமாக ஓர் வாய்க்காலை வெட்டுவதற்கு அரசினர் நன்கொடைப் பணமாக ரூபா 1000/= உதவியிருந்தும் சில காணிச் சொந்தக்காரர் காணிகளை கொடுக்கச் சம்மதியாத படியால் வாய்க்கால் வெட்டப்படாமல் விடவேண்டி நேரிட்டது செருக்கல் வெள்ளத்தால் கஷ்டப்படுபவர் அநேகர். அவ்வெள்ளம் இதுகாலவரையும்பாய்ச்சப்படாமல் திலையாகநின்று வற்றுவது வழக்கம். இந்த வருஷம் கிராமச்சங்கத் தலைவரால் கையாளப்பட்ட முறையினிமித்தம் சீக்கிரமாக வெள்ளம் பாய்ந்துவிட்டது. அருளம்பலம் என்பவரின் காணிக்கு அணித்தாயுள்ள காணியின் சொந்தக்காரர்கள் சிறுபிள்ளைகள் அவர்களின் பாதுகாப்புக்காரனுகிய ஸ்ரீமான் அ. கந்தையா அவர்கள் (கிராமச்சங்க அங்கத்தவர்) அநுமதியத்தினிமித்தம் அக்காணிக் கூடாக தண்ணீரைப் பாய்ச்ச இடங்கொடுத்தது மிகவும் மெச்சத்தக்கது. கடிதர் கூறியவாறு இவ்வொழுங்கையால் தண்ணீர் பாய்ச்சியதால் ஏழைகளுக்கு ஒருவிதமாகவேனும் இன்னலுக்கு ஏதுவாகவிருக்கவில்லை மாகாணத்தலைவர் கடிதர் முதலியவர்களின் பிடிவாதத்தினிமித்தம அனுப்பிய தந்திகள் பெட்டிஷம் முதலியவைகளைக்கண்டு நேரில் வந்துபார்த்து சங்கத் தலைவரால் வெள்ளம் பாய்ச்சுவதற்கு எடுத்த வழிவகைகள் அதிகம் சரியனவை என்றும், கடிதரின் துற்போதனையால் குறித்த ஒழுங்கை முன் உயர்த்தப்பட்டது தவறென்றும் கூறியதுமல்லாமல் உள்நாட்டு மந்திரிக்கும் இவ்விதமாக அறிக்கை செய்திருக்கிறாரென அறிகிறேன்.

கடிதர் தான் கிராமச்சங்கத்தில் ஓர் அங்கத்தவனுகவிருக்கும்போது தனது சுயநலங் கருதி வெள்ளம் பாய்வதற்கிருக்கும் ஓர் ஒழுங்கையை மட்டிபோட்டு உயர்த்தினர். தற்போதுள்ள தலைவர் வெள்ளத்தால் கஷ்டப் படுபவர்களுக்காக மேற்படி உயர்த்தப்பட்டதை மட்டமாக்கினுல் பொதுப்பணத்தை வீணுகச் செலவழித்தவர் எவர் என்பதை யாவரும் விளங்கலாம்.

இப்படிக்கு,
கா. தம்பையா,
கிராமச்சங்க அங்கத்தவர்.

## சைவ பரிபாலன சபை.

(13-1-36 ன் தொடர்)

"The great Navalar was the first to conceive the idea of founding an institution of the kind. With that object in view he had established a School teaching up to the Matriculation standard of the Madras University and located it where the Saivaprakasa Vidyasalai stands at present........... That institution would have formed the nucleus of our national College..........." என்று தா. பொன்னம்பலம்பிள்ளையும், "Hindu College was started in 1890" என்று வி. காசிப்பிள்ளையும், "This institution has been in existence for the last 10 years" என்று 1899 ஆ௵ ஆவணி௴ 26௳ பிரதமாசிரியர் செல்வத்துரையும், "The Jaffna Hindu College was established over 20 years ago...."என்று 4th May 1910-ல் வை. துரைசுவாமியும எழுதியிருக்கிறார்கள். இவை இப்படியிருக்க,

இந்துக்கல்லூரி மாணவரில் 1898 ஆ௵ கற்கத்தா பிரவேச பரீக்ஷையில் நால்வரும், F.A. பரீக்ஷையில் அறுவரும், 99 ஆ௵ கற்கத்தா பிரவேசபரீக்ஷையிலிருவரும், F. A. பரீக்ஷையில் நால்வரும சித்திபெற்றார்கள். 98-ம் ஆண்டு முடிவிலே இந்து கற்ற மாணவர் தொகை 357. 99–ம் ஆண்டு முடிவிலே இந்து கற்ற மாணவர் தொகை 328. இந்த இரண்டு வருஷங்களுக்கும் மாணவர் வேதன வரவு ரூ. 5432 சதம் 28½ ம், அரசினர் நன்கொடை ரூ. 2764 சதம்50ம்ஆகும். உபாத்தியாயர் வேதனமும் கல்லூரிச் சில்லறைச் செலவும் ரூ. 9852 சதம் 40 ஆனது. ஆகவே மேற்காட்டிய இரண்டு வருஷங்களிலும் ரூ. 1655 சதம் 61½ இச்சபையிலிருந்து கல்லூரிக்குக் கொடுக்கப்பட்டது. 99 ஆண்டு முடிவிலே இந்துக்கல்லூரியில் கற்பித்த உபாத்தியாயர் தொகை 14. இவருள் மூவர் B. A. பட்டவர்த்தனர். இக்கல்லூரி ஆரம்பமான காலம் முதல் இதிலே உபாத்தியாயராயிருந்த ச. பொன்னுத்துரை கொத்தாரிஸ் பரீக்ஷையிற் தேறியமையால் 1898–ம் ஆ௵ வைகாசி மாதத்திலும், மூன்று வருஷகாலம் இதிலே Professor ஆக இருந்த வி. கதிரவேற்பிள்ளை B. A. (தமபி) பிளீடர் சோதனைக்குப் படிப்பதற்காகப்போனும் ஐப்பசி மாதத்திலும் விலகினர்கள். 98 ஆ௵ ஐப்பசி௴ 21௳ வை. சண்முகம் இந்துக்கல்லூரி திருவாக சபையின் உதவி இலேககராக நியமிக்கப்பெற்றூர். இந்துக்கல்லூரிக் கட்டடத்துக்குப் பக்கத்திலே நடந்துவந்த விடுதிச்சாலை சிலகாலமாக நடவா திருந்தமையால் 99 ஆ௵ தை௴ 14௳ முதல பிரப்பங்குளத்தடியில் அ. மயில்வாகனத்தின் வீட்டை வாடகைக்கு எடுத்துநா. பொன்னையாவை Boarding Master ஆக வைத்து விடுதிச்சாலைநடத்திவந்தார்கள். தைமாதத்திலே பிரதமாசிரியர் செல்வத்துரை லீவு பெற்றுச் சென்ன பட்டணம் சென்றிருந்தமையால் அவர் வேலையை J. K. தமரிவாயபிள்ளை B. A. பார்த்துவந்தார். 99-ம ஆண்டுக்குதா. செல்லப்பாபிள்ளை, S. K. லோட்டன், சித. மு. பசுபதிச்செட்டியார் ஆகிய மூவரையும கல்லூரிக்கு Visitors ஆக நியமித்தார்கள். இக்கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவராயிருந்துவிலகிய வை. சங்கரப்பிள்ளையின் இடத்தில் 99 ஆ௵ ஆவணி௴ முதலாக த. தம்பிப்பிள்ளையையும், இ. செல்லையாவையும் ஆசிரியர்களாக நியமித்தார்கள்.

99 ஆ௵ ஆகஸ்ற்௴ 26௳ இக்கல்லூரி மாணவர்களுக்கு சுப்பிரீம் கோட்டு நீதிபதியாயிருந்திருந்த Joseph Grenier தலைமையில பரிசளிக்கப்பட்டது. திருவாகசபைஅங்கத்தவர்கள் எல்லோரும் அங்கத்தவரல்லாத கொழும்பு பொ. அருணாசலம், T. M. தம்பு முதலான பிரபுக்களும் ஒவ்வோர் பரிசு உதவினர்கள். இச்சபையின பிரதி அக்கிராசனுதிபதியாயிருந்து அகாலமரணமடைந்த அத்துவக்காத்து சி. நாகலிங்கத்தின ஞாபகார்த்தமாக பசுபதிச்செட்டியாராலே ஒரு பரிசு அளிக்கப்பட்டது. 1898—99-ம வருஷங்களில் கல்லூரிக் கட்டடத்திலே பொருட் குறைவினுல் அதிக வேலைகள் செய்யப்படவில்லை. கிணறு ஒன்று வெட்டினதின் பேராலும் சில்லறை வேலைகளின் பேராலும் இந்த இரண்டு வருஷங்களிலும் சென்ற செலவு ரூ. 563 சதம் 72¼ ஆகும்.

### சைவப்பிரசங்கம்.

இந்த இரண்டு வருஷங்களிலும் சைவப்பிரசங்கம் சில அசந்தர்ப்பங்களினுல் முன்போல அதிகம் நடைபெறவில்லை.

### இந்துசாதனம்.

இந்துசாதனப் பத்திரிகைக்குக் கையொப்பத்தாலும் விளம்பரத்தாலும் 98—99 ஆகிய இரண்டு வருஷங்களுக்கும் வந்த வரவு ரூ. 1613 சதம் 25. இதற்கு அச்சுக்கூலியல்லாமல் காகிதம் முத்திரை இவற்றிற்காகச் சென்ற செலவு ரூ. 937 சதம் 40½ ஆகும்.

மகா காருண்ய மகிமாவதியாகிய விக்ரோறியா மகாராணி முடிபுனைந்த ஐம்பதாம் வருட பூர்த்தி தினமாகிய பொன்விழா தினனது (1887 ஆ௵ ஆனி௴ 20௳) அத் தினஞாபகமாக, அத்துவக்காத்து நாகலிங்கமும அவரது நண்பர்கள் சிலரும்,

Victoria Reading Hall என்னும் பெயரோடு ஒரு வாசகசாலையைத் தொடங்கி 1895 ஆ௵ மார்கழி௴ முதல் அதை இந்துக் கல்லூரிக் கட்டடத்திலே வைத்து நடத்திவந்தார்கள் என்று முன் சொல்லியுள்ளோம். அதன் தாபகராகிய நாகலிங்கம் அகால மரணமடைந்தபின் சிறிது தழர்வுற நேர்ந்தபோது, யாழ்ப்பாணத்தவராய் தென் இந்தியாவில் உதவிக் கலெக்டர் உத்தியோகம் வகித்திருந்த V. S. குருநாதபிள்ளை "The Hindu" என்னும் சென்னபட்டணத் தினவர்த்தமானியும், கொழும்பிலிருந்து பொ. அருணசலம் "The New age", "The India", "The Amirtha Bazaar Patrika" என்னும் பத்திரிகைகளும, யாழ்ப்பாணத்திலிருந்து தா. செல்லப்பாபிள்ளை "The Weekly Edition of the London Times" "The Madras Standard" "The Western Star" என்னும் பத்திரிகைகளும, அ. சபாபதி "The Ceylon Independent" என்னும் பத்திரிகையும, வி. காசிப்பிள்ளை "The Ceylon Standard"என்னும் பத்திரிகையும், அ. கனகசபை "The Ceylon Observer" 'Catholic Guardian" என்னும் பத்திரிகையும், சித. மு. பசுபதிச்செட்டியார் "சுதேசமித்திரன்" என்னும் பத்திரிகையும், R. N. அருணம்பலம் "The Theosophist" என்னும் பத்திரிகையும் S. வேலுப்பிள்ளை "The Theosophic Gleaner" என்னும பத்திரிகையும் இந்துசாதன ஆலயம், "The Ceylon Examiner" "Times of Ceylon" "Weekly Edition of the Independent" "Hindu Organ" "Awakened India" "Mahratta" இந்துசாதனம், ஆரியஜனப்பிரியன், ஸஜ்ஜனபத்திரிகா லோகோபகாரி, விவேகதிவாகரன், பிரமவித்தியா, ஞானபோதினி, அமிர்தவசனி, விகடதூதன், பாண்டியகுலபரிபாலினி, தேசாபிமானி திருச்சி நேசன் "The Astrological Magazine" முதலியபத்திரிகைகளும உதவிவர அவற்றை வைத்துக்கொண்டு நடத்தி வந்தார்கள.

இவ்வாசகசாலையை 1899ம் ஆண்டில் அ. கனகசபையை அக்கிராசனுதிபதியாகவும், வி. காசிப்பிள்ளையை உப அக்கிராசனுதிபதியாகவும், N. செல்வத்துரையை இலேககராகவும, ச. சிவகுருநாதரை தனுதிகாரியாகவும், R. N. அருணம்பலத்தை கணக்குப் பரிசோதகர்களாகவும், சித. மு. பசுபதிச்செட்டியார், அ. சபாபதி, வை. சண்முகம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, பெ. கார்த்திகேசு, சி. கந்தையா, ச. சிவப்பிரகாசம், J. K. தமரிவாயம்பிள்ளை, ஆ. சிவகுருநாதர், இ. கதிரவேலு ஆகிய பதின்மரையும்அங்கமாகவும் கொண்ட ஒரு சபையே நடத்திவந்ததாகும். இது இப்படியிருக்க,

—(வரும்)

# கொயிலன் வங்கி
## (லிமிற்றெட்)
(1919-ம் ஆண்டு
திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)
## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் வினவியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

---

"இரதி மன்மத"
## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீரணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், Quilon S. India

H 208. 1-12-35 to 31-5 36

---

திறம் தேக்கமரம்　　பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சியம் தேக்கமரங்கள்　ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள்　ரூபா 2-75சதந் தொடக்கம்

### இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
(Y 57. 1-5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

---

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
புதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

Y 53. 1-1—31-12-36)

---

## முக்கிய அறிவித்தல்.

அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:


| | |
|---|---|
| ஒருமுறைக்கு ஒருபந்தி (கலம்) | ரூ. 10-00, |
| ,, அரைப்பந்தி | ,, 5-50. |
| ,, கால் பந்தி | ,, 3-00. |
| ,, 1 அங்குலம். | -75. |

விளம்பரக் கூலியும் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும் இவ் விளம்பரங்கள் மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மானேஜர்
இந்துசாதனம்,

---

## குடைமார்க் ஓடுகள்.



உலகில் உள்ள ஓடுகளில்
மிகப் பெரியனவும் மலிந்தனவும் இவையே.
அரசினர்க்குஇவ்வோடுகளை உதவுவோர்

J. செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

H 114 1-8-35 to 31-1-36)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளும் கொடுத்திருக்கிறார்கள். இவைகளை விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு,சாலாமூஸ்லி,சப்பேமுத்வலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதப்பருப்பு, சா[illegible], நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிப்பஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீருப் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ரூதசவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடு வாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-35) சிலோன்.

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y. 203. 21-11-35—20-11-36) ஐ.)

---

## வீ. பீ. நிக்கலஸ் அன் சனஸ் (வங்கி)
(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)
2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னடாங்க்"　தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்திலுள்ள ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரால் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

சப்பற்துண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத் தக்கதாக, கமிஷனின்றி கப்பற்துண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
மனேஜர்.

(Y. 138. 21-10-35—20-10-36.) ஐ

---

## புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொளும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக்கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழுவிபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற்,கொழும்பு என்றவிலாசத்தற்குஎழுதவும்.

H. 200. 13-11-35 to 12- -36. ஐ

---

## பத்திரக் கிரயம்.
( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (தபாற்கூலி உட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 8 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

---

வான்முகில் வழாதபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 20th January 1936